
(14)

# வடபகுதியில் காசோலை மோசடி அதிகரிப்பு!

Registered as a News Paper in Ceylon விலை[சதம்_ 15 ★ ★




ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் : 49
போன் : 389
மலர் 12
இதழ் 244
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் புரட்டாதி 27 ஷஃபான் 11 செவ்வாய்க்கிழமை (13-10-70)

அன்டன்
வாளிகள்
அளவுகள் 7'' முதல் 14'' வரை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130

## தபாலில் அனுப்பப்பட்ட ரூ. 1000 காசாக்கியது யார்?

மாவிட்டபுரம், திங்கள்
வடபகுதியில் காசோலை மோசடி அதிகரித்துள்ளது. தபாலில் அனுப்பிவைக்கப்படும் காசோலைகள் போய்ச் சேரவேண்டிய இடத்திற்குப் போகாமலேயே காசாக்கப்படும் சம்பவங்கள் நடைபெற்றுவருவதாகக் கூறப்படுகிறது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு மக்கள் வங்கியிலுள்ள தமது வைப்புப் பணத்தில் சேர்ப்பதற்காக ஒரு வழக்கறிஞரால் தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட 1000 ரூபா பெறுமதியான காசோலை ஒன்று வைப்புப் பணத்தில் சேர்க்கப்படாமல் காங்கேசன்துறை மக்கள் வங்கியில் காசாக்கப்பட்ட மோசடி ஒன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞருக்கு இப்பகுதியைச்சேர்ந்த ஒருவர் 1000 ரூபா காசோலையை வழங்கியிருந்தார். அதை பிரஸ்தாப வழக்கறிஞர் கொழும்பு வங்கிக்கு தமது வைப்புப்பணத்தில் சேர்ப்பதற்காக அனுப்பியிருந்தார். தபாலில் அனுப்பிவைக்கல்பட்ட இந்தக் காசோலை கொழும்பு வங்கிக்குப் போய்ச்சேராமல் காங்கேசன்துறை வங்கியிலேயே காசாக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் அண்மைக் காலத்தில் இதுபோன்ற சம்பவம் இரண்டு நடைபெற்றுள்ளது. கடந்தவாரம் சாவகச்சேரியிலிருந்து கொழும்புக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட 95 ரூபா பெறுமதியான மக்கள் வங்கிக் காசோலை ஒன்று யாழ்ப்பாணம் மக்கள் வங்கியில் 5065 ரூபாவாக திருத்தி எழுதப்பட்டு காசாக்கப்பட்ட மோசடி சம்பந்தமான செய்தி ஒன்றும் இம்மாதம் 9-ந்திகதி 'ஈழநாட்டில் வெளியாகியிருந்தது தெரிந்ததே'

தபாலில் அனுப்பிவைக்கப்படும் காசோலைகள் எந்த விதத்தில் கைமாறப்படுகின்றன என்பதைக் கண்டறிவதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அனுப்பிவைக்சப்படும்இடங்களுக்கு அவை போய்ச் சேராமலேயே தபாற்பகுதியினரிடமிருந்து இவை கையாடப்படுவதாகவும்கூறப்படுகிறது.

காங்கேசன்துறை மக்கள் வங்கியில் நேற்றுக் காசோலையைக் கொடுத்து 1000 ரூபா ரொக்கப்பணம் பெற்றுக்கொண்டவரைக் கண்டுபிடிப்பதில் பொலிசாரும் வங்கியினரும் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

காசோலைகளை மாற்றும் போது மிகவும் அவதானமாக இருக்கும்படி வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் ஏற்கனவே எச்சரிக்கைவிடுத்திருந்தார்.

# மக்கள் சீனக் குடியரசு வழங்கும் 2 கோடி ரூபாய் கடன் வசதி

## பண்டாரநாயக்க மண்டபத்துக்கும் மேலதிகமாக 55 லட்சம் ரூபாய்

கொழும்பு, திங்கள்
மக்கள் சீனா இலங்கைக்கு 2 கோடி ரூபாய்க்கான கடன் உதவி வழங்க முன்வந்துள்ளது.

இலங்கையின் உற்பத்திப் பொருள்களின் அபிவிருத்திக்கும், சீனாவிலிருந்து பாவனைப் பொருட்கள் தருவித்துக் கொள்வதற்கும் இந்தக் கடன் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

மக்கள் சீனக்குடியரசு வழங்கவிருக்கும் கடன் தொகையைக் கொண்டு சீனாவிலிருந்து அரிசி மற்றும் துணிவகைகள் தருவிக்கப்படும். இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் அபிவிருத்திக்கு இக்கடனை எங்ஙனம்பயன்படுத்துவது பற்றி பின்னர் முடிவு செய்யப்படும் இதுசம்பந்தமான ஒப்பந்தம் இம்மாதம் 15-ம் திகதி கையெழுத்தாகும்.

### மேலதிக உதவி

கொழும்பில் அமைக்கப்படவிருக்கும் பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டப செலவுகளுக்கென மக்கள்சீனா மேற்கொண்டும் 55 லட்சம் ரூபா கொடுத்துதவ விருக்கின்றது மண்டபக் சட்டிடத்துக்கான பிரத்தியேக செலவுகளைச் சரிசெய்வதற்காக இந்தப்

## புளியங்கூடல் கொலை முயற்சி வழக்கு

## 2 எதிரிகளுக்கு அபராதம்! கட்டத்தவறினுல்சிறைவாசம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
புளியங்கூடல் கொலை முயற்சி வழக்கில் முதலாம் எதிரியை 500 ரூபாய் பிணையில் செல்லும்படியும் 2ம் எதிரியை 500 ரூபாய் அபராதம் கட்டும்படியும், 3ம் எதிரி 50 ரூபாய் அபராதம் கட்டும்படியும் நீதியரசர் உத்தரவிட்டார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

எதிரிகள், கடும் காயம் விளைவித்த குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினர்.

2ம் எதிரி அபராதம் கட்

தில் 200ரூபாய் காயமடைந்தவருக்கு வழங்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முறைப்பாட்டுக்காரரான அப்பர்த்துரையை இனிமேலாவது திருந்தி நடக்குமாறு நீதியரசர் எச்சரித்தார்.

இவ்வழக்கில் புளியங்கூடலில் 1969ம் ஆண்டு மார்ச் மாதம் 10ந் திகதி தில்லையம்பலம் அப்பாத்துரையை கொலைசெய்ய முயற்சித்ததாக வீரகத்தி சின்னத்துரை, சின்னத்துரை கந்தசாமி, சின்னத்துரை தம்பிஐயா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் ஆர் பி. தம்பிரத்

## இன்று

யாழ்ப்பாணம், செவ்வாய்
தென் கருணையம்பதி இந்து வாலிபர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா இன்று சோழங்கன் கருப்பையடி அம்மன் கோவில் அருகே அமைக்கப்பட்ட ஆறுமுகநாவலர் அரங்கில் நடைபெறும்.

## 'தமிழ்கலைபிரிவுமாணவர்க்கு புத்தகம் வழங்கப்படுமா?'

கோட்டை திங்கள்
தமிழ் கலைப்பிரிவு மாணவர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் புத்தகம் வழங்கப்படுவதுபோல் கலைப்பிரிவுக்கு ஏற்ற புத்தகங்கள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்குரிய காரணத்தையும் தொடர்ந்து இது கொடுக்கப்படுமா என்பதையும் உடுப்பிட்டி எம் பி திரு கே. ஜெயக்

யுதீன் மஹ்மூத்தைக் கேட்டுக்கொண்டார்.

கொழும்பில் தொடர்ந்து கலைப்பிரிவு நடைபெறுமா அல்லது அதை நிறுத்துவதா என்ற முடிவு இதுவரை எடுக்கப்படவில்லை! கலைப்பிரிவு தொடர்ந்து நடைபெறுவதென்று முடிவு எடுக்கப்பட்டால் புத்தகங்கள் வழங்கப்படுமென்று

## புதிய ரஷ்ய தூதுவர்

கோட்டை, திங்கள்
இலங்கையின் சோவியத் தூதுவரான இன்று திரு. நீசாஜேவ் இராணிமாளிகையில் கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவிடம் தமது நியமனப் பத்திரம்

## பிரயாணிகள் இன்றி

## பஸ்கள் நிற்காமல் ஓடுகின்றனவா?

கொழும்பு, திங்கள்
பஸ்தரிப்பு நிலையங்களில் பிரயாணிகள் காத்துக் கொண்டிருக்கும் அதே வேளையில் வெற்று பஸ்களை அல்லது இடவசதியுள்ள பஸ்களை நிறுத்தாமல் ஓட்டிச்செல்லும் பஸ் சாரதிகள் மீதும் கண்டக்டர்கள்

இதற்காக ஒரு விசேஷப் பிரிவு செயல்படவிருப்பதாகவும் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் திடீர் சோதனைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்றும் இ. போ. ச. அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவித்த குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினுர்.

2ம் எதிரி அபராதம் கட்டத் தவறினுல் ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை என்றும், 3ம் எதிரி அபராதம் கட்டத் தவறினுல் 6 வாரம் சாதாரண சிறைத் தண்டனை என்றும், 2ம் எதிரியின் அபராதப் பணத் சாமி, சின்னத்துரை தம்பி ஐயா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஆர் பி. தம்பிரத்தினம், புரக்டர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர். எதிரிக்காக அரசாங்கத் தரப்பில் புரக்டர் ரி. குணரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்குரிய காரணத்தையும் தொடர்ந்து இது கொடுக்கப்படுமா என்பதையும் உடுப்பிட்டி எம் பி திரு கே. ஜெயக்கொடி பிரதிநிதிகள் சபையில் கல்வி மந்திரி ஜஞப் பதி வரை எடுக்கப்படவில்லை. கலைப்பிரிவு தொடர்ந்து நடைபெறுவதென்ற முடிவு எடுக்கப்பட்டால் புத்தகங்கள் வழங்கப்படுமென்று கல்வி மந்திரி கூறினுர்.

(நல் றி)

## சித்திரவதை செய்த வழக்கு:

# மூவர் தொடர்ந்து றிமாண்டில் மூவர் தேடப்படுகின்றனர்

வல்வெட்டித்துறை, திங்

புலோலி தெற்கைச் சேர்ந்த கந்தையா விநாசித்தம்பி என்பவரை கடந்த புரட்டாதி மாதம் 28 ம் திகதி அதே இடத்தைச் சேர்ந்த டாக்டர் இரத்தினசிங்கத்தின் மனைவி சிவபாக்கியமும் அவரது மகன் இராஜேந்திரன், த. மயில்வாகனம் ஆகியோரும் வீட்டினுள் வைத்து கையையும் கால்களையும் கட்டியும் வாயை சீலையினுல் கட்டியும் அவரது கைவிரல்களுக்கு குண்டூசி ஏற்றி சித்திரவதை செய்ததாகப் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது இது சம்பந்தமாக இன்னும்மூவர் தலைமறைவாக இருப்பதாக மாஜிஸ்திரேட்டிற்கு எடுத்துக் கூறப்பட்டது. எதிரிகளை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறும் இம்மாதம் 16-ந் திகதி சாவகச்சேரி கோர்ட்டில் எதிரிகளை ஆஜர் செய்யுமாறும்மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

# அத்துளு குழாய் நீர் விநியோகம் தாமதம் ஏன்?

புலோலி, திங்கள்

அத்துளு குழாய் நீர்த் திட்ட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ள போதிலும், நீர் விநியோகம் இதுவரை ஆரம்பிக்கப்படாமல் இருப்பதையிட்டு இப்பகுதி மக்களிடையே பலத்த அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

குழாய் நீர் விநியோகத்தில் அரசியல் தலையீடு இருப்பதே இவ்வித தாமதத்திற்குக் காரணமெனக் கூறப்படுகிறது. இதுபற்றி இப்பகுதி மக்கள் உடுப்பிட்டி எம். பி.யிடம் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

# வாடிவீட்டில் இளம்பெண்ணை கைவிட்ட காதலன் யார்?

## பணியாள் கைது

மாவிட்டபுரம், திங்கள்

ஒரு வாடிவீட்டில் காதலஞல் கைவிடப்பட்ட காதலி ஒருத்தி ஒரு ஆசிரியரிடம் தஞ்சம் புகுந்தபோது பொலிசில் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று கீரிமலையில் நேற்று நடந்தது.

திருநெல்வேலியைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணும் கந்தரோடையைச் சேர்ந்த ஒரு இளைஞனும் இப்பகுதியில் உள்ள வாடி வீடுஒன்றில் தங்கியிருந்ததாகவும் அப்போது இவர்கள் இருவருக்குமிடையே ஏற்பட்ட தகராற்றைத் தொடர்ந்து காதலன் காதலியை விட்டு விட்டுச் சென்றதாகவும் காதலி அழுத வண்ணம் சேந்தாங்குளம் நோக்கிச் சென்று ஒரு ஆசிரியரிடம் தஞ்சம் புகுந்ததாகவும் அவ்வாசிரியர் பெண்ணை காங்கேசன்துறை பொலிசில் ஒப்படைத்ததாகவும் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக வாடி வீட்டு பணியாள் ஒருவரைப் பொலிசார் கைது செய்ததுடன் பிரஸ்தாப காதலனையும் தேடி வருகின்றனர்.

மேற்படி பெண்ணை பெற்ரேருடன் செல்ல பொலிஸார் அனுமதித்துள்ளனர்.

# வேலைவாய்ப்புக்கு ரூ. 20 கோடி பிரதமர் ஒதுக்கியுள்ள தொகை

கோட்டை, திங்கள்

கைத்தொழில் விவசாய துறைகளில் ஒருலட்சம் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் வேலைவாய்ப்பளிக்க பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா விரிவான திட்டம் ஒன்றை வகுத்துள்ளார்.

திட்ட வேலைவாய்ப்பு அமைச்சரான பிரதமர் மேற்படி திட்டத்தைச் செயற்படுத்த 2 கோடி ரூபா ஒதுக்கியுள்ளார்

அத்தனகலையில் சமீபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா மேற்கண்டதகவலை வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே 20 கோடி ரூபாவை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க ஒதுக்கும்படி தான் நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் அக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார்,

இலங்கையின் சோவியத் தூதுவரான இன்று திரு. நீசாஞேவ் இராணிமாளிகையில் கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவிடம் தமது நியமனப் பத்திரங்களை சமர்ப்பித்தார்.

திரு. நிசாஞேவ் கவர்னர் ஜெனரலுடன் உரையாடுகையில் இலங்கைக்கும் சோவியத் நாட்டுக்கும் பரஸ்பரம் ஒத்துழைப்பு, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை உடனிருந்து வாழ்தல்போன்ற கொள்கைகளில் உறவுகள் பலப்பட்டு வருமென்று நம்பிக்கை தெரிவித்தார்.

கொடுத்துதவ விருக்கின்றது மண்டபக் கட்டிடத்துக்கான பிரத்தியேக செலவுகளைச் சரிசெய்வதற்காக இந்தப் பணம் பயன்படுத்தப்படும். இத்தொகையுடன்சீன அரசாங்கம் 3 கோடி 50 லட்சம் ரூபா பண்டாரநாயக்கஞாபகார்த்த மண்டபத்துக்குக் கென வழங்கவிருக்கின்றது. இத்தகவல்களை சீனத் தூதுவர் திரு. மா-சூ-சி இன்று தெரிவித்தார்.

கொண்டிருக்கும் அதே வேளையில் வெற்று பஸ்களை அல்லது இடவசதியுள்ள பஸ்களை நிறுத்தாமல் ஓட்டிச்செல்லும் பஸ் சாரதிகள் மீதும் கண்டக்டர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க புது திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவிருக்கின்றது.

## கூட்டம்

## ஒத்திவைக்கப்பட்டது

நாளை ஜின்ஞ மைதானத்தில் நடக்கவிருந்த அல்பதாஹ் ஆதரவு முன்னணி பொதுக்கூட்டம் வியாழக்கிழமைக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

......

அசைஸ்

## விசாரணைகள் முடிவடைந்தன

யாழ்ப்பாணம், செவ்

வடபகுதி அசைஸ் நீதிமன்ற விசாரணைகள் நேற்றுடன்முடிவடைந்தன. இப் பருவகால விசாரணையின் போது 27 வழக்குகள் விசாரணை செய்யபப்பட்டன.

நீதியரசர் ஓ. எல். டி. கிறெட்ஸர், வழக்கறிஞர்களையும், பிஸ்கால் உத்தியோகத்தர்களையும், பொலிஸாரையும், பத்திரிகைகளையும் பாராட்டினுர்.

சேர்ந்தவர்கள் திடீர் சோதனைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்றும் இ. போ. ச. அறிவித்துள்ளது.

# இளம் பெண்ணைக் காணவில்லையாம்

மாவிட்டபுரம், திங்கள்

வீட்டில் படுத்திருந்த இளம் பெண்ணைக் காலையில் காணவில்லையாம். கீரிமலை - போயிட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவரின் மகளான 18 வயது நிரம்பிய இளம் பெண் கடந்த இரவு படுக்கைக்குச் சென்றதாகவும் மறுநாட்காலை படுக்கையில் காணவில்லையென்றும் பொலிசில் புகார்செய்யப் பட்டுள்ளது.

## சர்வதேச சிறுவர்தின விழா

பண்டத்தரிப்பு. திங்கள்

மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட கிராமங்களின் சர்வதேச சிறுவர்தினவிழா இம்மாத நடுப்பகுதியில் இளவாலை மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது. சிறுவர்களுக்கான கலைக்கதம்ப நிகழ்ச்சிகள் விழாவில்இடம் பெறும்.

# சுவீப்முடிவுகள்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகளின் விபரம் வருமாறு:

**1-ம் பரிசு**

10 J 0120 ரூ. 93260

**2-ம் பரிசு**

17 K 0303 ரூ. 37304

**3-ம் பரிசு**

27 W 0049 ரூ 9326

தலா ரூ. 466-36 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம்:

| | |
|---|---|
| 09 P 0256 | 07 M 0208 |
| 01 Y 0498 | 18 Y 0173 |
| 28 U 0923 | 14 Z 0288 |
| 10 H 0902 | 04 Q 0887 |
| 38 V 0433 | 30 O 0275 |
| 32 J 0673 | 33 K 0719 |
| 20 Y 0008 | 31 R 0664 |
| 15 Z 0031 | 17 X 0336 |
| 27 B 0345 | 09 K 0157 |
| 08 Y 0711 | 37 J 0358 |
| 25 A 0883 | 31 E 0820 |
| 16 E 0215 | 16 C 0267 |
| 33 T 0100 | 35 K 0932 |
| 33 Q 0370 | 16 R 0792 |
| 39 Y 0856 | 15 E 0321 |
| 23 Q 0460 | 24 Q 0142 |
| 17 L 0481 | 14 G 0673 |
| 26 R 0374 | 33 E 0352 |
| 08 K 0982 | 07 L 0839 |
| 28 N 0654 | 03 D 0944 |
| 27 L 0049 | 07 K 0274 |
| 17 Z 0393 | 21 J 0345 |
| 02 D 0695 | 33 J 0353 |
| 34 X 0378 | 28 Y 0505 |
| 36 R 0372 | 01 H 0874 |
| 08 Q 0350 | 17 B 0674 |
| 07 M 0336 | 18 T 0011 |
| 01 F 0466 | 16 B 0644 |
| 04 O 0439 | 25 W 0764 |
| 19 H 0096 | 27 W 0291 |
| 34 V 0315 | 36 A 0748 |
| 38 X 0110 | 19 H 0955 |
| 35 Y 0082 | 01 M 0922 |
| 02 J 0624 | 31 C 0678 |
| 25 Q 0832 | 05 S 0650 |
| 19 T 0869 | 02 Y 0459 |
| 09 E 0670 | 04 Z 0180 |
| 21 P 0154 | 19 F 0877 |
| 35 A 0595 | 29 U 0289 |

| | |
|---|---|
| 37 H 0817 | 10 O 0974 |
| 16 J 0210 | 10 K 0783 |
| 26 D 0602 | 38 H 0971 |
| 04 D 0574 | 11 F 0414 |
| 16 S 0923 | 19 S 0237 |
| 01 L 0176 | 34 A 0530 |
| 24 J 0871 | 14 X 0906 |
| 36 A 0750 | 26 W 0754 |
| 16 U 0477 | 01 X 0916 |
| 20 P 0078 | 09 Z 0783 |
| 03 O 0412 | 25 U 0799 |

(இவை உறுதிப்படுத்தப் படவேண்டும்)

ஈழநாடு ஆதரவில்

# தீபாவளிக் கலைவிழாவும் விளையாட்டு விழாவும்

"சென்ற வருடம் தீபாவளி விளையாட்டு விழாவும் கலைவிழாவும் சிறப்பாக நடத்தினீர்களே; இம் முறைஇல்லையா; ஏன் இது பற்றி இதுவரை அறிவித்தல் ஒன்றையும்காணேம். தீபாவளிக்கு விளையாட்டுவிழாவும் கலைவிழாவும் ஈழநாடு கட்டாயம் நடத்த வேண்டும். எங்களை ஏமாற்றி விடாதீர்கள்.''

கடந்த சிலதினங்களாக 'ஈழநாடு' அன்பர்கள் நேரிலும். தொலைபேசியிலும் கடிதமூலமாகவும் இப்படி அன்புக்கட்டளைகள் பிறப்பித்து வருகின்றனர்.

மக்களின், வாசகர்களின் மகிழ்ச்சியே ஈழநாட்டின் மகிழ்ச்சி.

இம்முறையும் தீபாவளிக்கலை விழாவும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியும் தீபாவளித் தினத்தன்று உங்களை மகிழ்விக்கப் போகின்றன,

29-10-70 அன்று தான் தீபாவளி.

அன்று பிற்பகல் 1 மணிக்கு யாழ்.கோட்டை மைதானத்தில் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி ஆரம்பமாகும். இப்போட்டியில் இரட்டைத்திருக்கல் வண்டிகள் மட்டுமே கலந்து கொள்ள முடியும். அதாவது 'ஏ' 'பி' பிரிவுகள் தான் போட்டியில்அனுமதிக்கப்படும்ஒற்றைத்திருக்கல் வண்டிகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியின்பின்னர் அன்று மாலை-

யாழ். திறந்த வெளியரங்கில்-

நடனம், நாடகம், மெல்லிசை, ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

நம் நாட்டின் தலை சிறந்த கலைஞர்கள் இந்த நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கிறுர்கள்.

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியும் கலை நிகழ்ச்சிகளும் மட்டுந்தான் என்று நினைக்காதீர்கள்.

**தீபாவளிப்பரிசு**

உங்களுக்குத் தீபாவளிப் பரிசும் கிடைக்கும்-

இந்தப்பரிசைப் பெறுவதற்கு நீங்கள் செய்யவேண்டியது என்ன?

நாளை மறுதினம் "ஈழநாடு' பத்திரிகையைப் பாருங்கள்"

'ஸ்டீல்சன்ஸ்' திரு. எம். பூபாலசிங்கம் ஜே.பி. யாழ் உலோகத் தொழிற்சாலை திரு. கே. இராஜலிங்கம் ஆகியோரை இணைக் காரியதரிசிகளாக் கொண்ட யாழ் விளையாட்டு அமைப்புக் குழு விஞல்வடபகுதிப் பொலிசாரின் ஒத்துழைப்புடன் ஈழநாடு' ஆதரவுடன் தீபாவளிக்கலைவிழாவும் விளையாட்டு விழாவும் நடைபெறுகிறது.

## நிரந்தர ஊழியராக்கும் படி கோரி

# தாங்கியிலிருந்து குதித்து தற்கொலை செய்யப்போவதாக அட்டகாசம்!

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையிலுள்ள 90 அடி உயரமான நீர்த்தாங்கிமீது ஏறி நின்று அட்டகாசம் செய்த தொழிலாளி ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்

மேற்படி தொழிற்சாலையில் தற்காலிக தொழிலாளியாகக் கடமையாற்றிவரும் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த சிவபுண்ணியன் என்பவர் நேற்றுக்காலை தொழிற்சாலையில் உள்ள நீர்த்தாங்கி மீது ஏறி நின்றுகொண்டு 'என்னையும் மற்ற நிரந்தரமாக்காத தொழிலாளர்களையும் நிரந்தரமாக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் இதில் இருந்து குதித்து இறக்கப்போகிறேன்' என்று கூறி அட்டகாசம் செய்தாராம்.

இவரை அதிலிருந்து இறக்கப் பொலிசாரும்; ஊழியர்களும் எடுத்த முயற்சி அதிக நேரம் பயனளிக்கவில்லை. இதையடுத்து மேற்படி தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவரான திரு எஸ் கணபதிப்பிள்ளை தொழிலாளரை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறியதை அடுத்து அவர் நீர்த்தாங்கியிலிருந்து இறங்கிஞராம் அவரைப் பொலிசார் கைது செய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

யக்கச்சி கிழக்குத் தோட்டப் நூற்றெழுபது ஏக்கர். பத்து அல்லது கூடிய ஏக்கரைக் கொண்ட துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும் கண்டி ரோட், பளை, யக்கச்சி சந்தியிலிருந்து முக்கால் கட்டை. தென்னை, சிறு பயிர்கள், பாற்பண்ணை, கோழிப்பண்ணைக்கு ஏற்ற நிலம், அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கு அரிய சந்தர்ப்பம். லான்ட் இன்வெஸ்ற்மெண்ட், 6, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2325

காணி

வவுனியா வெளிக்குளத்தில் கொறப்பொத்தானை ரோட்டுக்கருகாமையில் 117 அடி 104 அடி விஸ்தீரணமுள்ள வீட்டுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: தா, இரத்தினசபாபதி, நவாலி வீதி, யாழ்ப்பாணம். 2333

காணி:

உடுப்பிட்டி வடமராட்சிப் பகுதியில் சன்னதி ரோட்டருகில் வாசிகசாலை, பாடசாலை மற்றும் இடங்களுக்கு மிக அண்மையில் உள்ள 7 லாச்சம் 14 24/32 குழிகள் கொண்டுள்ள காணி விற்பனைக்கு. பிரிவினை உறுதி. விலைகேட்கவும் 159, பிக்கறின்ஸ் தெரு, கொழும்பு-13. 2993

காணி;

கொட்டடி பீச் ரோட்டில் 25 பரப்புக்காணி ஒருமிக்கவும், துண்டுகளாகவும் பிரித்துக் கொடுக்கலாம். தொடர்பு கொள்ளவும். திருமதி கே. கே. சுப்பிரமணியம் இல. 42, கொட்டடி, யாழ்ப்பாணம். 2334

கார்:

CL 7165 இலக்கமுள்ள ஏ போர்ட்டி கார் விற்பனைக்குண்டு. சந்திரா பேணிச்சர் பலஸ், கே. கே. எஸ். ரோட், சுன்னாகம். 2332

### ஏல விற்பனை

சிமெந்து வெற்றுப் பைகள், பத்திரிகைகள், வெற்றுப் பேணிகள், ஆகியவை 20-10-70 ம் திகதி மு. ப. 10-30 மணிக்கு யாழ்ப்பாண மாநகரசபை பொதுக் களஞ்சியத்தில் வைத்து ஏலத்தில் விற்கப்படும். பொருட்களை அலுவலக நேரத்தில் பொதுக் களஞ்சியத்தில் பார்வையிடலாம்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகராட்சி மன்ற ஆணையாளர்.
2508


## என்றியரசர் வெற்றி

பண்டத்தரிப்பு, திங்.

இளவாலை என்றியரசர் கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 1-ம் பிரிவில் என்றியரசர் கல்லூரியினர் 4 கோல்களைப் போட்டனர். சென். ஜோன்ஸ் 1 கோலை மட்டும் போட்டது. 2-ம் பிரிவினர்கான ஆட்டத்தில் என்றியரசர் கல்லூரியினர் 3 கோல்களைப் போட்டனர். சென். ஜோன்ஸ் ஒரு கோலும் போடவில்லை.

## மகாஜனு வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையின் கீழ் தற்போது யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனுக் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற முதல் பிரிவுப் போட்டியில், மகாஜனுக் கல்லூரி 3 — 0 கோல்களால் வெற்றி பெற்றது.

(தே. நி)


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர் — நிர்மலா
ஜி. வரலக்ஷ்மி — நாகேஷ்
நடித்த

உயிரா மானமா

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

கண்ணன் - ராதிகா
தேங்காய் சீனிவாசன்
நடித்த

ஒரு விரல் (ஒரு மர்ம சித்திரம்)


வடபகுதியில் உற்பத்தியாகும்

# 120 தொன் சின்ன வெங்காயம் தினம் கூ.மொ.வி.யில் கொள்வனவு

# அரசியல் கட்சியின் கூற்றில் எவ்வித உண்மையுமில்லையாம்

கோட்டை, திங்கள்

வடபகுதியில் உற்பத்தியாகும் 120 தொன் சின்ன வெங்காயத்தை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் தினம் கொள்வனவு செய்வதாக கூ. மொ. வி.யைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்து சின்ன வெங்காயத்தை கூ. மொ வி. ஸ்தாபனம் கொள்வனவு செய்வதில்லையென ஒரு அரசியல் கட்சி பிரச்சாரம் செய்துவருவதாகவும் அதில் எவ்வித உண்மையில்லையெனவும் அவ் அதிகாரி கூறினார். அரசியல் கட்சியின் குற்றச்சாட்டை அவர் மறுத்ததுடன் அதுசம்பந்தமாக விளக்கமும் தெரிவித்தார்.

வடபகுதியில் உற்பத்தியாகும் சின்னவெங்காயத்தை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் கடந்த காலத்தில் மாதாமாதம் எவ்வளவு கொள்வனவு செய்திருக்கிறது என்பதுகுறித்துபுள்ளி விபரங்களையும் அவர் எடுத்துக் காட்டினர்

இம்மாதத்தில் 2,675 தொன் சின்னவெங்காயம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும்நவம்பர்மாதத்தில் 1250 தொன் சின்ன வெங்காயம் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

உதைபந்தாட்டம்

# யாழ். தலைவர் கோஷ்டி கொழும்பிடம் தோல்வி!

யாழ்ப்பாணம், செவ்.

கொழும்பு சென். பெனடிக்ற்ஸ் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணத் தலைவர் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கடைசி நிமிடத்தில், சென். பெனடிக்ற்ஸ்கோஷ்டி மிகச் சாதுரியமாக யாழ் கோஷ்டியை வெற்றி பெற்றது.

இந்தப் போட்டி ஆரம்பமாகி பத்து நிமிடங்களுக்குள், யாழ் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் மணி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டார். இதன் பின் இடைவேளை வரை ஆட்டம் ரசனையற்றதாகவே காணப்பட்டது.

இடைவேளையின் பின் சென். பெனடிக்ற்ஸ் கோஷ்டியினரின் விளையாட்டில் வேகம் அதிகரித்துக் காணப்பட்டது இவர்கள் பல முறை கோல்களைப் போடுவதற்கு முன்னேறிய போதிலும், யாழ். கோஷ்டியின் பின்னணி வீரர்கள் மிகச் சாதுரியமாகத் தடுத்தணமே இருந்தனர்.

இப் போட்டி முடிவடைவதற்குப் பத்து நிமிடங்கள் இருக்கும் போது சென். பெனடிக்ற்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் மிகச் சாதுரியமாக மூன்று கோல்களை அடுத்தடுத்துப் போட்டு விட்டார்கள்.

ஆட்டமுடிவில் யாழ் தலைவர் கோஷ்டியை 3 — 2 கோல்களால் கொழும்பு சென். பெனடிக்ற்ஸ் கல்லூரி தோற்கடித்தது.

இப்போட்டி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி)

## மக்கள்குழு

யாழ்ப்பாணம், செவ்,

மட்டுவில் வடக்கு கமலாசனி வித்தியாசாலையில் மக்கள் குழு அமைப்பதற்கான பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டமொன்று இம்மாதம் 14-ம் திகதிகாலை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

## ஸ்கந்தா வெற்றி

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை என்றியரசர் கல்லூரி குல், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 1-ம் பிரிவினருக்கான ஆட்டத்தில் என்றியரசர் கல்லூரியினர் 1 கோலை மட்டுமே போட்டனர். ஸ்கந்தா கல்லூரியினர் அடுத்து 5 கோல்களைப் போட்டு வெற்றியீட்டினர்.

2-ம் பிரிவினருக்கான ஆட்டத்தில் ஸ்கந்தா கலூரியினர் 2 கோல்களை மட்டும் போட்டனர். என்றியரசர் கல்லூரியினர் ஒரு கோலும் போடவில்லை என்றியரசர் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

## 2 ஆட்டங்களிலும் நெல்லியடி வென்றது

## கரவெட்டி கொலைவழக்கு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, திங்கள்

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கே .வன்னியசிங்கம், எஸ். பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் இவ் வருடம் ஏப்ரல் மாதம் 4ந் திகதி அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராகவன் அல்லது ஆனந்தன் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததாகப் பருத்தித்துறைப் பொலிஸாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு, பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வின்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொலிஸ் உத்தியோகத்தர்களான ஈ. ஏ. ஜயரத்ன, பி. என் தசநாயக்கா, வி. ஏ. விமலசிங்க, திரு த. சின்னத்துரை ஆகியோர் சாட்சியமளித்த பின் மேல் விசாரணையை இம்மாதம் 10ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 'மின்சாரம் வேண்டும்'

சுழிபுரம், திங்கள்

பொன்னாலைப்பகுதி மக்களுக்கு ஓர் உபதபாற்கந்தோரும், மின்சார வசதியும் கிடைக்க வழி செய்துதருமாறு பொன்னாலை கிராமசபை உறுப்பினர் திரு ஜே எம் மயில்வாகனம் ஜே பி தலைமையில் சென்ற தூதுக் குழுவொன்று வட்டுக்கோட்டை எம் பி திரு ஆ தியாகராஜாவிடம் வற்புறுத்தியது

லொறிவிபத்து

## நால்வர் ஆஸ்பத்திரியில்

பல்லவராயன்கட்டு, திங்

ஓடிக்கொண்டிருந்த லொறியின் முன்னால் திடீரெனக் குறுக்கேவந்த எருமைமாடு ஒன்றைக்காப்பாற்றச்சாரதி எடுத்த முயற்சி லொறியிலிருந்த நால்வரை படுகாயந்துக்குள்ளாக்கியது. பல்லவராயன் கட்டில் இவ்விபத்து நேற்று நடந்தது.

கிளிநொச்சியிலிருந்து மன்

# '8-ம்வகுப்பு அகற்றும்திட்டம் வடமராட்சியில் வேண்டாம்'

புலோலி, திங்கள்

'வடமராட்சியிலுள்ள மத்திய மகா வித்தியாலயங்களிலும், மகா வித்தியாலயங்களிலும் தற்போதுள்ள 8-ம் வகுப்பை அகற்றி கனிஸ்ட பாடசாலைகளில் சேர்ப்பது பொருந்தாத காரியமாகும் ஆசிரியர் பற்றுக்குறையாகவுள்ள இப் பாடசாலைகளில் 3-ம் வகுப்பு மாணவர்களையும் மாற்றுவதினால் மாணவர்களின் கல்விநிலை பாதித்துவிடும் எனவே இத் திட்டத்தை வடமராட்சிப் பகுதியில் அமுல் நடத்துவதை ரத்துச் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்'.

இவ்வாறு உடுப்பிட்டி எம்.பி திரு. கே ஜெயக்கொடி கல்வி அமைச்சர் ஜனுப் பதியுதீன் மகமுத்துக்கு அனுப்பிவைத்துள்ள அவசர கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

திரு ஜெயக்கொடி அக்கடிதத்தில்மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

எனது தொகுதியில் மகா வித்தியாலயங்களிலும் மத்திய மகாவித்தியாலயங்களிலும், பல கனிஷ்ட வித்தியாலயங்களிலும் போதுமான ஆசிரியர்களோ இல்லாமலிருக்கிறது. அத்துடன் இப் பாடசாலைகளில் 8ம் வகுப்பு மாணவர்களுக்கு கல்வி போதிக்கத்தக்க ஆசிரியர்களும் இல்லை. இந்த நிலையில் இத் திட்டத்தை இங்கு அமுல் நடத்துவதில் மாணவர்கள் கஷ்டத்துக்குள்ளாவார்கள். பல பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றன. இத் திட்டத்தை இத் தொகுதிக்கு அமுல் நடத்துவதை நிறுத்தி வைக்கவும்.

## விக்னேஸ்வரா எதிர்ப்பு

புலோலி, திங்கள்

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் தற்போதிருக்கும் 8-ம் வகுப்பை இல்லாமல் செய்து 9-ம் வகுப்பிலிருந்து நடாத்தப்பட வேண்டுமென்ற கல்வி அமைச்சின் முடிவைக் கண்டித்து பெற்றோர் ஆசிரியர் சங்கமும் கல்லூரி அதிபரும் உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடிக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளார்கள்.

......

## உபதபாலதிபர்கள் தொழிற் சங்கம்

யாழ்ப்பாணம். செவ்.

அகில இலங்கைத் தமிழ்

## ஆசிரியர் இடமாற்றம்

பருத்தித்துறை, திங்கள்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விஞ்ஞான ஆசிரியர் திரு எஸ் தம்பிராசா உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார். பண்டாரவளை சென். மேரிஸ் கல்லூரி ஆசிரியர் திரு வீ. கே. சுப்பிரமணியம் வதிரி திரு இருதயக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

0 0 0

## 'எழுதிய கரம்'


பண்டத்தரிப்பு, திங்கள்

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினரின் 'எழுதிய கரம்' என்னும் நாடகம் இம் மாதம் 14-ம் திகதி சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் மேடையேற விருக்கிறது.


கைத்தறி நெசவாளர்களுக்கு
ஓர் அறிவித்தல்

உங்களிடம் உற்பத்தியாகும் எந்தவிதமான கைத்தறி ஜவுளிகளையும் பெறுமதியான விலைகளுக்கு எம்மிடம் விற்பனை செய்யலாம்,

S. R. S.
ஜவுளி மாளிகை
எஸ். ஆர். செல்லத்துரை,
216, கே.கே.எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296



"இது எனது மூன்றாவது குழந்தை. அடுத்த குழந்தையை இன்னும் மூன்று வருடம் கழித்து பெற விரும்புகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி 3 காட்சிகள் நடித்த

# ஒரு விரல் (ஒரு மர்ம சித்திரம்)

5-வது வாரம்

## வெலிங்டன் யாழ்நகர்

(2-30, 6-30, 9-30) போயா தினங்களில் 4 காட்சிகள்

கிங்ஸ்லி (கொழும்பு)

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.

உணர்ச்சி ஓவியம் . . .

★ ஏ.வி.எம்.ராஜன்

இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி

நடித்த

ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

# துலாபாரம்

(தமிழ்)

டைரக்ஷன்: வின்ஸன்ட்

(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

★ சிவாஜி ★ சௌகார் ஜானகி

சிவகுமார், வாணிஸ்ரீ, பாரதி

மற்றும் பலர் நடித்த

ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்

# உயர்ந்த மனிதன்

[1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பாராட்டைப் பெற்றது]


பட்டது இவர்கள் பல முறை கோல்களைப் போடுவதற்கு முன்னேறிய போதிலும், யாழ். கோஷ்டியின் பின்னணி வீரர்கள் மிகச் சாதூரியமாகத் தடுத்த வண்ணமிருந்தனர் இக் கோஷ்டியின் பின்னணி வீரர் எம். தேவதாசின் விளையாட்டு சிறப்பாக இருந்தது. இதே வேளையில், யாழ் கோஷ்டியின் முன்னணி வீரர்களும் பல கோல்களைப் போடும் கட்டங்களை நழுவவிட்ட வண்


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி 6-30, 9-30

போயா, பிரீபோயா 2-30

மனோகர் — மணிமாலா நடித்த

எதிரிகள் ஜாக்கிரதை

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 2-30, 6-30, 9-30

சிவாஜி-பத்மினி நடித்த

செந்தாமரை

MANOHARA
Jaffna

Daily 4-45, 7 & 9-45 p m
Suzy Kendall
James Booth
in
FRAULEIN DOKTOR
(Strictly for Adults)

REGAL
Jaffna
Daily: 4-45, 7 & 9-45 p.m.
Poya days 4 Shows

GLAMOROUS WOMEN
OF THE WORLD
(Adults only)

# யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் — காஞ்சனா

மஞ்சுளா - நாகேஷ் - ரமாபிரபா

நடித்த

# சாந்தி நிலையம்


கூட்டமொன்று இம்மாதம் 14-ம் திகதி காலை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது;

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 27-ம் திகதி

(13-10-70)

மேஷம்- கடமையாற்றும் இடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும். டாகடர்கள் போற்றப்படுவார்கள். நல்ல நாள்.

ரிஷபம்- சிறிவரும்கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். உடல்நலம்பாதிக்கப்படும். பொறுமை வேண்டும்.

மிதுனம்- ஊதியம் வளரும். உற்சாகம் பெருகும். உறவினர் வாழ்த்தும் இதயத்தில் இனிமை சேர்க்கும்.

கடகம்- இதயத்தின் ஏக்கம் இன்று கனியும். தேடிய பொருள் காலடியில் சரணடையும். செல்வாக்குப் பெருகும்.

சிம்மம்- கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். எடுத்த காரியத்தில் தாமதம்ஏற்படலாம், எனவே அடக்கத்துடன் நடக்கவும்.

கன்னி- புதுமையான எண்ணங்களால் உந்தப்படுவீர்கள். உடலில் தனி உற்சாகம் பிறக்கும். நல்ல நாள்.

துலாம்- பொருள் கைவிட்டுப் போகும். மற்றவர்களிடத்தில் பொல்லாங்கு கேட்க நேரிடலாம். எதையும் தாங்கும் இதயம்வேண்டும்.

விருட்சிகம்- குறிக்கோளில் இன்று வெற்றி கிடைக்கும், இலட்சியவாதிகள் போற்றப்படுவார்கள். இறையருளும் கிடைக்கும்.

தனுசு- மனம் போல் வாழ்வு மலரும். கடமையாற்றுமிடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்- பக்குவமான தினம்.

மகரம்- வரவில் உயர்வு தென்படும். பெரியவர்களின் வாழ்த்தும் கிடைக்கும். புதினத்துக்கும் இடமுண்டு.

கும்பம்- பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும். தனி வழிப்பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும்.

மீனம்- இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும். மனதுக் குமைச்சலினால் வேதனைப்படுவீர்கள். தெய்வநம்பிக்கைவேண்டும்-

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

றது.

## 2 ஆட்டங்களிலும் நெல்லியடி வென்றது

பருத்தித்துறை, திங்கள்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கும், தேவரையாளி இந்துக் கல்லூரிக்குமிடையில் நேற்று முன்தினம் நெல்லியடி விளையாட்டு மைதானத்தில் நடந்த சிநேகபூர்வமான 1ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் நெல்லியடிக்கோஷ்டி தனியொருகோலால் வெற்றியீட்டியது. ஆரம்பத்திலிருந்தே ஆட்டம் சுவாரஸ்யமாக இருந்தது திரு. டி. தம்பிஐயா மத்தியஸ்தராக கடமையாற்றினுர்.

இரு கல்லூரிகளினதும் 2ம் பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையிலான போட்டியில் நெல்லியடிக் கோஷ்டி 3—0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. எஸ். சிவதயாபரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, திங்கள்

கரம்பன் கண்ணகி அம்பாள் கோவில் ஆலய பரிபாலனசபையின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: திரு. மு. சரவணமுத்து, உபதலைவர்: திரு. பொ. விநாயகமூர்த்தி காரியதரிசி: திரு. வி. கனகசபை, உபகாரியதரிசி: திரு சங்கர சிவசம்பு, தனாதிகாரி: திரு. இ மாணிக்கம் ஜே பி., நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது

0 0 0

ஊர்காவற்றுறை, திங்கள்

கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலய பெற்றூர்-ஆசிரிய சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் திருமதி எஸ் ஆறுமுகராசா. உபதலைவர் திருமதி பாலசுப்பிரமணியம், காரியதரிசி திரு பி சனகரத்தினம், உபகாரியதரிசி திரு ஐ கந்தையா, தனாதிகாரி திரு கே ஆசைப்பிள்ளை

## விசேஷ பஸ் சேவை

அம்பன், திங்கள்

வல்லிபுரக்கோயில் தேர், தீர்த்தத்தையொட்டி பருத்தித்துறை பஸ் டிப்போவினால் விசேஷ பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வல்லிபுரக் கோயிலடியில் தற்காலிகமாக ஒரு பஸ் தரிப்பு நிலையமும் இயங்கவிருக்கிறது.

எடுத்த முயற்சி லொறியிலிருந்த நால்வரை படுகாயந்துக்குள்ளாக்கியது. பல்லவராயன் கட்டில் இவ்விபத்து நேற்று நடந்தது.

கிளிநொச்சியிலிருந்து மன்னார் சென்றுகொண்டிருந்த பிரஸ்தாப லொறியின் முன்னால் எருமைமாடு ஒன்று குறுக்கே ஓடியதாகவும், லொறிச்சாரதி லொறியை எருமைமாட்டின் மீது மோதவிடாமல் தடுக்க முயற்சித்தபோது லொறி பாலத்தில் கவிழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. காயமடைந்த நால்வரும் அபாயகரமான நிலையில் மன்னார் ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டனர்.

## கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

அம்பன் திங்கள்

தற்போதய அரசினால் மேற்கொள்ளப் பட்டிருக்கும் கூட்டுறவுப் புனரமைப்புத் திட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளில், அல்லது பாதகமான வேலைகளில் கூட்டுறவு ஊழியர்கள் ஈடுபடக்கூடாதெனவும் கட்டுப்பாட்டைமீறி ஈடுபட முயற்சிப்போர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் சகல கூட்டுறவு ஊழியர்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார்

## புதுக்குடியிருப்பு கி. ச. தேர்தல்

புதுக்குடியிருப்பு, திங்கள்

புதுக்குடியிருப்பு கிராம சபைத் தேர்தலுக்கான அபேட்சர் பத்திரங்கள் இம்மாதம் 27-ம் திகதி கிராம சபை காரியாலயத்தில் வைத்து ஏறுக்கொள்ளப் படவிருக்கிறது.

9 வட்டாரங்களைக் கொண்ட கிராமசபையின் வட்டாரங்கள் தற்போது பத்தாக அதிகரிக்கப்பட்டுள்ளது'

......

## 'கண்ணாடி தொழிற்சாலை நிறுவ வேண்டும்'

உடுப்பிட்டி திங்கள்

வல்லிபுரம் கடற்கரையில் கண்ணாடித் தொழிற்சாலையொன்று நிறுவப்படவேண்டுமென்ற கோரிக்கை சுமார் ஐம்பதினாயிரம் பேரின் கையொப்பங்களுடன் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வடமராட்சி மித்திரன் இளைஞர்கழகம் இதற்கான முயற்சிகளில் துரிதமாக ஈடுபட்டுள்ளது.

## உபதபாலதிபர்கள் தொழிற் சங்கம்

யாழ்ப்பாணம். செவ்.

அகில இலங்கைத் தமிழ் பேசும் உபதபால் அதிபர்களின் தொழிற்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் கொழும்பு தபால் தந்தித் தலைமைக் காரியாலய 7 வது மாடியில் இம்மாதம் 3-வது வாரத்தில் நடைபெறுமென தபால் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

0 0 0

## தபால் பஸ்சின் சீர்கேடு

உடுப்பிட்டி, திங்கள்

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கும் தபால் சேவையில் ஈடுபடும் பஸ் வண்டி அடிக்கடி பழுதடைவதால்வடமராட்சிப்பகுதித் தபாற் கந்தோர்களிலிருந்து தபால்கள் தாமதித்தே சேகரிக்கப்பட்டுவருகின்றனவாம்.


"இது எனது மூன்றுவது குழந்தை. அடுத்த குழந்தையை இன்னும் மூன்று வருடம் கழித்து பெற விரும்புகிறேன். அடிக்கடி கர்ப்பந்தரிப்பதை தடுக்க குடும்பத்திட்டம் உதவியது."


தாய்மார்களே!

உங்களுக்கும் இந்தப் பிரச்னை உண்டானால் இரகசிய ஆலோசனைக்கு எழுதுங்கள்:

குடும்பத்திட்டத் தகவல்,
457, காலி வீதி,
கொள்ளுப்பிட்டி.

நாள்தோறும்சிகிச்சைகள்

இலங்கை குடும்பத்திட்டச் சங்கம்,
23/5, ஹோர்டன் பிளேஸ்,
கொழும்பு-7.







மங்கல நீராடி
மகிழ்ச்சி பொங்க
மங்கைகள் பாவிப்பது

ரெமி

குடும்ப டால்க்
சருமத்தை மென்மையாகவும்
குளுமையாகவும்
வைத்திருக்க
ரெமி

வியாபார விபரங்களுக்கு:

அவ்ரா அன் கோ.,

19, செட்டியார் தெரு, கொழும்பு 1.
போன்: 27211



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்பாடு ஏற்பட்டால்

# மேற்காஸிய நாடுகளுக்கு அமெரிக்கா நிதி உதவி அளிக்கும்

நியுயோர்க், அக். 12

**மேற்காசியாப் பிரச்னை ஓர் உடன்பாட்டுக்கு வருமாளுல் பாலஸ்தீன விடுதலை இயக்கம் உட்பட மேற்காசிய பிரச்னையில் ஈடுபட்டிருக்கும் எல்லா நாடுகளுக்கும் அமெரிக்கா நிதி உதவி அளிக்கும் என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு, றெஜர்ஸ் தெரிவித்தார்.**

**மேற்காசிய யுத்தத்தில் எகிப்துக்கு சோவியத் யூனியன் தேவையான ஆயுதங்களை அளிக்குமென ஐ. அ. குடியரசின் புதிய ஜனாதிபதி திரு: சதாத் தெரிவித்தார்:**

மேற்காசியா, இந்தோசீனு ஆகியவற்றில் அமைதியை ஏற்படுத்துவதில் அமெரிக்கா மிகவும் விருப்பத்தோடு செயற்பட்டுவருகிறது. அதற்குவேண்டிய நடவடிக்கைகளையும் அவ்வப்போது எடுத்துவருகிறது. இப்பகுதிகளில் சமாதானத்தை ஏற்படுத்த அமெரிக்கா பல ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளது. அதன்படி சம்பந்தப்பட்டவர்கள் மேற்காசிய நிலைமைபற்றி பேச்சுவார்த்தை நடத்தி ஒரு உடன்பாட்டுக்கு வருவார்களேயாளுல், அமெரிக்கா பலஸ்தீன விடுதலை முன்னணி உட்பட மேற்காசியாவில் உள்ள நாடுகளுக்கு நிதிஉதவி அளிக்குமென அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. றெஜர்ஸ் இன்று தெரிவித்தார்.

இதே நேரத்தில் தென் வியட்நாமில் இருந்து இவ்வாண்டு அக்டோபர் நடுப்பகுதிவரையில் 60 ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்கள் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டும் அமெரிக்கத் துருப்புக்கள் திருப்பி அழைக்கப்பட்டிருக்கின்றன. இச் செயலால் தென்வியட்நாமில் சமாதானம் ஏற்படுவதற்கு அமெரிரிக்கா தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறதென அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் இன்று வாஷிங்டனில்தெரிவித்தார்.

நியுயோர்க் வரும் சோவியத் வெளிவிவகார அமைச்சர் குரோமிக்கோவுடன் தாம் இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக திரு. றேஜர்ஸ் தெரிவித்தார்.

மேற்காசியா ப் போரில் ஐ. அ குடியரசின் ராணுவ பலத்தைப் பெருக்குவதற்கு வேண்டிய ஆயுதங்களை ரஷ்யா கொடுக்குமென ஐ. அ. குடியரசின் புதிய ஜனாதிபதி திரு. அன்வார் சதாத் கெய்ரோவில் தெரிவித்தார். ஐ. அ குடியரசு மீது அதன் மேற்காசிய கொள்கையை மாற்றுவதற்காக அமெரிக்க நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த முயலுகிறது ஆனல் மறைந்த ஜனாதிபதி நாசர் உலகின் முன்வைத்த கோரிக்கையில் இருந்து ஐ. அ குடியரசுமாருது. மேற்காசியாவில் அமெரிக்காவின்போக்கு எங்களுக்குத் தெரியும் என்ருர் அவர்.

தற்பொழுதுள்ள போர் ஒய்வை எகிப்து மேலும் நீட்டுவதற்கு விரும்பவில்லை என அதன் பாதுகாப்பமைச்சர் தெரிவித்தார்.

மேற்காசியாப் போர் ஒய்வு ஏற்பட ஐ. அ குடியரசும், சோவியத் யூனியனும் உதவிசெய்யவேண்டும் என இஸ்ரேல் பிரதம மந்திரி திருமதி கொல்டா மெயர் ஜெருசலத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இன்றிருக்கும்போர் ஒய்வை நவம்பர் 5ம் திகதிக்குப் பின்பும் நடைமுறைப் படுத்துவதற்கு இஸ்ரேல் தயாராகஇருக்கிறது. ஆனல் இந்த இஸ்ரேலின் விருப்பம் ஐ. அ. குடியரசு சோவியத் யூனியன் ஆகியவற்றின் செயலைப்பொறுத்தே இருக்கும்.

## அகதிகள் புனர்வாழ்வுக்கு 1 கோடி 40 லட்சம் ரூபா

புதுடில்லி, அக்.12

மத்திய அரசின் உதவியுடன் மறுவாழ்வு நிதி உதவி நிறுவனம் அகதிகள் வாழ்...

உதவி அளிக்கப்படுகிறது.

போக்கு வரத்திற்கு 80 லட்சம் ரூபாவும், ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு 16 லட்சம் ...

## குடும்பக் கட்டுப்பாடு மகாநாடு

டோக்கியோ, அக் 12

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட அறிஞர்கள் நாலு நாள் மகாநாடொன்று டோக்கியோவில் கூடுகிறது. இம்மகாநாட்டில் இலங்கை உட்பட பல நாடுகள் கலந்துகொள்ளுகின்றன. உலகில் பெருகிவரும் ஜனத்தொகையைக் கட்டுப்படுத்துவதுபற்றியும், அவற்றில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றியும் இம்மகாநாட்டில் ஆராயப்படும். அடுத்துவரும் 10 ஆண்டுகளில் பெருகக்கூடிய ஜனத்தொகைபற்றியும் பன்முக இருமுகப் பொருளியல் பற்றியும் இங்குவரும் அறிஞர்கள் ஆராய்வர். இலங்கையின் சார்பில் இம்மகாநாட்டில் பேராசிரியர் டி.ஏ' ரணசிங்கா கலந்துகொள்வார்.

## மோரைப்பழம் சாப்பிட்டு குழந்தை மரணம்

முல்லைத்தீவு, திங்கள்

மோரைப்பழம் என்னும் ஒருவித பழங்களை அதிகமாகச் சாப்பிட்ட காரணத்தால் ஏற்பட்ட நோயினல் இரண்டரை வயதுக் குழந்தை மரணமானது. முல்லைத்தீவைச் சேர்ந்த அளம்பில் என்னுமிடத்திலுள்ள கோபால் என்பவரின் மகளான தனலட்சுமியே இவ்விதம் திடீர் மரணமுற்று இறந்தவராவார் இச் சம்பவத்தைத் தொடர்ந்து இப்பழம் இங்கு விற்பனைக்கு வருவதில்லையென்பது குறிப்பிடத் தக்கது.

இந்த ஆண்டுக்குள்

## மஸ்கெலியா

## மறைக்கல்வி மகாநாடு

பண்டத்தரிப்பு, திங்கள்

எதிர்வரும் மார்கழி மாதத்தில் அகில இலங்கையிலுமுள்ள தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களுக்கான மறைக் கல்வி மகாநாடு யாழ்ப்பாணம் பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. மறைக்கல்வியைப் புகட்டும் வழிவகைகள் பற்றி இம்மகாநாட்டில் முடிவு செய்யப்படும் எனத் தெரிகிறது. யாழ் மறைக்கல்வி நடுநிலையத் தலைவர் வண. ஜி. ரி. பாலசுந்தரம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

......

## பத்திரிகையாளர் காலமானர்

கோட்டை, திங்கள்

இலங்கையின் பழம்பெரும் பத்திரிகையாளரான திரு. பியசேனநிஸங்கா கொழும்பில் காலமானர். ஐம்பது ஆண்டுகாலம் இவர் பத்திரிகைத் துறையில் பணியாற்றியுள்ளார். 'தினமின' பத்திரிகையின் ஆசிரியராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

## 'எந்த அரசாங்கமும் வேலைநிறுத்தத்தை ஆதரிக்காது'

கோட்டை, திங்கள்

எந்த ஒரு அரசாங்கமும் வேலை நிறுத்தங்களை விரும்ப மாட்டாது வேலை நிறுத்தங்கள் நாட்டின் பொருளாதாரத்தைப்பெரிதும் பாதிக்கும்'.

அங்கொடை மன நோயாளர் ஆஸ்பத்திரியில் சிறிலங்கா சௌக்கிய ஊழியர் தொழிற் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தின மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் 'தொழிலாளர்களின் நலனையே சோஷலிச அரசாங்கம் கருதுவதால் சோஷலிச அரசாங்கத்தின்கீழ் வேலை நிறுத்தங்கள் இருக்கமாட்டா. இந்த அரசாங்கம் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் அரசியல் உரிமைகளையும் தொழிற் சங்க உரிமைகளையும் வழங்கும்; எனக் குறிப்பிட்டார்.

## நிபந்தனைக்கு இணங்காவிட்டால் கடத்தப்பட்ட மந்திரியும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பதிவுத் தபால் போன்று

## புதிய தபால்சேவை ஒன்றை ஆரம்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

தபால் விநியோகத்தில் ''றெக்கோடெட் டெலிவறி சர்வீஸ்'' என்ற புதிய திட்டமொன்றை அமுல் நடத்தும்படி அகில இலங்கை உபதபால்அதிபர்களின் ஐக்கிய முன்னணி தபால், தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரிடம் கேட்டுக் கொண்டுள்ளது இதுபற்றி ஆலோசனை செய்வதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

''பதிவுத்தபாலைப் போன்று கடிதம் பெறவேண்டியவரிடம்கையொப்பம் வாங்கிய பின்னரேகடிதம்விநியோகிக்கப்படும் ஆனல் இப்புதிய திட்டத்தின்படி தபாற்கந்தோர்களில் கடிதத்தை கையளிக்கும் போது அதைப் பெற்றுக் கொண்டதற்கான ரசீது தபாலதிபரால் வழங்கப்படமாட்டாது'' என்று ஐக்கிய முன்னணி அமைச்சரிடம் கையளித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

பதிவுத்தபலுக்கு அறவிடப்படும் கட்டணத்திலும் பார்க்க குறைந்த கட்டணத்தை பொதுமக்களிடமிருந்து வசூலித்து பொது மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்காகவே இத்திட்டத்தை அமுல் நடத்தும்படி தாங்கள் கோருவதாக உபதபால் அதிபர்கள் ஐக்கிய முன்னணி இணைச்செயலாளர் திரு. ஐ, நடராசா தெரிவித்துள்ளார்.

## தண்ணீர்முறிப்பு பரிபாலனத்துக்கு ஒரு சபை

முல்லைத்திவு, திங்கள்

தண்ணீர் முறிப்புத் திட்டத்தைப் பரிபாலிக்க வவனியா அரசாங்க அதிபர் திரு நெவில் ஜெயவீராவின் முயற்சியினல் ஒரு சபை அமைக்கப்பட்டது.

இதற்கான தேர்தலை நேற்று முன்தினம் நெவில் ஜெயவீரா நடாத்தினர்.

திரு தா. நல்ல தம்பி தலைவராகவும் ஜனப் யூ. நாகூர்பிச்சை செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்'

நிர்வாகசபை உறுப்பினர் 13 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தண்ணீர் முறிப்புத் திட்டத்தை நல்வழியில் பரிபாலனம் செய்து குறைநிறைகளை அரசாங்க அதிபருடன் உடனுக்குடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதே இச்சபையின் நோக்கமாம்.

இவ் வைபவத்தில் முல்லைத்தீவுப் பிரிவுக் காரியாதிகாரி திரு சொ. கணேசநாதன் மற்றும் உத்தியோகத்தர்களும் பிரசன்னமாயிருந்தனர்,

......

## தீர்மானம்

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டியிலுள்ள கத்தோலிக்க பெண்களின் நலனை முன்னிட்டுக் கரவைகத்தோலிக்கவாலிபர்கழகம் தையற்பயிற்சிநிலையம், நெசவுசாலை ஆகியவற்றைத் தேவாலய வளவில் நிறுவுவதெனத் தீர்மானித்துள்ளது.

வடபகுதி

## விஞ்ஞான ஆசிரியர் கருத்தரங்கு

பருத்தித்துறை, திங்கள்

வடபகுதி விஞ்ஞான ஆசிரியருக்கான உயிரியல், விலங்கியல். விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் கருத்தரங்குகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. மேற்படி பாடங்களை க பொ த உயர்தர வகுப்புகளில் போக்கும் ஆசிரியருக்கான கருத்தரங்குகள் வெவ்வேறு தினங்களில் வெவ்வேறு இடங்களில் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை, உடுப்பிட்டி கோப்பாய் சாவகச்சேரித் தொகுதிகளிலுள்ள ஆசிரியருக்கான கருத்தரங்கு பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரியில்இம்மாதம் 17-ம் திகதி 3 மணிக்கு ஆரம்பமாகும் காங்கேசன்துறை, உடுவில் தொகுதிகளில் உள்ள ஆசிரியருக்கான கருத்தரங்கு இம்மாதம் 18-ம் திகதி தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெறும். யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறைத் தொகுதி ஆசிரியருக்கான கருத்தரங்கு யாழ் இந்துக் கல்லூரியில் 19-ம் திகதி நடைபெறும்.

க பொ த (சாதாரண) வகுப்புகளில் உயிரியல் போதிக்கும் ஆசிரியருக்கான கருத்தரங்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இம்மாதம் 16-ம்திகதி பிற்பகல்இரண்டு சணிக்கு நடைபெறவிருக்கிறது.

## மாநகரசபை ஊழியர் தமிழ்க்கழகம் அமைத்தனர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

''வாணி என்பது தேவலோகத்திலுள்ள பெண்ணல்ல. கலைகளையும் அழகையும் நம்முன்னவர் வாணியென்ற தெய்வமாக உருவகப்படுத்தினர். உலக இயக்கத்துக்கு ஆதாரமானவள் சக்தி. சக்தியின் பேற்றிலேயே மனித உலகம் வாழ்கின்றது.''

இவ்வாறு யாழ் மாநகரசபை மராமத்துப் பொறியியலாளர் திரு. இ. வைத்திலிங்கம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையத்தில் வாணி பூசையை ஆரம்பித்து வைக்கும்போது தெரிவித்தார்.

வெற்றித் தினமாகிய விஜயதசமி தினத்தை மூன்னிட்டு நடைபெற்ற வாணி பூசையில் முதலில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர் வி. கந்தவனம் தலைமையில் கவிஞர்கள் இ. நாகராஜன். காரை செ. சுந்தரம்பிள்ளை. வே. ஐயாத்துரைஆகியோர் துர்க்கை, திருமகள், கலைமகள் என்ற முச்சக்திகளையும் பொருளாகக் கொண்டு பாடினர்கள்.

திருமதி சரஸ்வதி பாக்கியராசா குழுவினரின் இசைக்கச்சேரியும் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் மாநகரசபை ஊழியர் தமிழ்க்கழகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இக்கழகத்தின் தலைவராக திரு. இ. வைத்திலிங்கமும், உபதலைவராக ம. வேலுப்பிள்ளையும், இணைச் செயலாளர்களாக சா. ஆ. தர்மரத்னம், ரி' எஸ் லோகநாதன் ஆகியோரும், பொருளாளராக நா. சண்முகநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர். காப்பாளர்களாக மாநகரசபைத் தலைவரும் ஆணையாளரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## 'சுந்தரர் தேவாரம் காட்டும் சைவ உண்மை'

யாழ்ப்பாணம், செவ்.

அப்பனை அம்மையாக்கி அருள்வேண்டி வழிபாடு செய்த பெருமை சைவத்துக்கே உரியது. இதை பொன்னார்மேனியனேஎன்று தொடக்கி அன்னே உன்னையல்லால் என்று விளிக்கும் சுந்தரர் தேவாரத்தால் அறி...

நாள் கொண்டாடப்படுகிறது. அழும் கன்றின் குரல் கேட்டுத் தாய்ப்பசுஓடிவருவது போல அருளுக்கு அவாவும் அன்பரின் அலறல் கேட்டு அம்மை அருளிசுரக்க ஓடிவருவாள்.

வல்வை சிதம்பராக் கல்லூரி விஜய தசமி நாள் ...

## 1 கோடி 40 லட்சம் ரூபா

புதுடில்லி, அக்.12

மத்திய அரசின் உதவியுடன் மறுவாழ்வு நிதி உதவி நிறுவனம் அகதிகள் வாழ்வுக்கென ஒரு கோடி 40லட்சம் ரூபாவைச் செலவிடவிருக்கிறது. இலங்கை பர்மா ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவரும் அகதிகளின் புனர்வாழ்வுக்கே இந்நிதி உதவி அளிக்கப்படுகிறது.

போக்கு வரத்திற்கு 80 லட்சம் ரூபாவும், ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு 18 லட்சம் ரூபாவும் செலவிடப்படுமென தெரிவிக்கப்பட்டது.

இந்த நிதி உதவியின் கீழ் 2500 குடும்பங்களைக் குடியமர்த்த இருப்பதாக அறியப்படுகிறது.

## 'தி. மு. க.-சுதந்திரா உறவு: அவசர முடிவு வேண்டாம்'

— ராஜாஜி

மைலாப்பூர், அக். 12

திராவிட முன்னேற்றக் கழகத்துடன் சுதந்திரக் கட்சி உறவை முறித்துக் கொள்வது பற்றி எவ்வித அவசர நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாதெனச் சுதந்திராக் கட்சித் தலைவர் திரு: சி. இராஜகோபாலாச்சாரியார் கேட்டுக்கொண்டார்.

மயிலாப்பூரில் நடந்த சுதந்திரா அரசியல் மகாநாட்டில் இராஜாஜி உரை நிகழ்த்தினுர்.

சமீப காலமாகச் சுதந்திரா அங்கத்தவர்கள் தி. மு. க.வுடன் உறவை முற்ருக முறித்துக்கொண்டுவிட வேண்டுமென்ற கோரிக்கையைக் கிளப்பிவருகின்றுர்கள்.

இது சம்பந்தமாகத் தலைவர் இராஜாஜி மயிலாப்பூரில் நேற்று முன்தினம் நடந்த சுதந்திராக் கட்சி மகாநாடொன்றில் உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

இப்போது அவசரமாக எவ்வித முடிவும் எடுக்க வேண்டாமென்றும் நன்ருக ஆராய்ந்தபின்னரே முடிவை எடுக்கவேண்டும் என்றும் அவர் சொன்னுர்.

— —

## மேற்கு ஜெர்மன் சான்ஸலரை டிட்டோ சந்தித்தார்

பொன், அக். 12

யூகோஸ்லாவிய ஜனுதிபதி மார்ஷல் டிட்டோ, மேற்கு ஜெர்மன் சான்ஸலர் வில்லி பிராண்டை இன்று பொன்னில் சந்தித்தார்.

லக்ஸம்பர்க்கிலிருந்து தாயகம் திரும்புகையிலேயே ஜனுதிபதி டிட்டோ, வில்லி பிராண்டைச் சந்தித்தார். ஐரோப்பிய பாதுகாப்புப் பற்றி இருவரும் பேச்சுவார்த்தை நடத்தியதாக அறியப்படுகிறது. இருவரின் சந்திப்புக்குப்பின்சான்ஸலர் வில்லிபிராண்ட் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் மேற்காசியா பற்றியும், அண்மையில் யூகோஸ்லாவியாவுக்கு அமெரிக்க ஜனுதிபதி நிக்ஸனின் விஜயம் பற்றியும் பேசியதாகத் தெரிவித்தார்.

— —

## கல்வி விஞ்ஞான கலாச்சார மகாநாடு

பாரிஸ், அக் 12

ஐ. நா. சபையின் கல்வி விஞ்ஞான கலாச்சார அமைப்பின் மகாநாடு பாரிசில் இன்று கூடுகிறது. இவ்வமைப்பு இரண்டு வருடத்துக்கொருமுறை கூடுவதாகும் இம்மகாநாட்டில் 125 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கிருர்கள். அபிவிருத்தி அடைந்த நாடுகளின் கல்வி அபிவிருத்திபற்றி இம்மகாநாட்டில் ஆராயப்படுமென அறிவிக்கப்பட்டது.

## 126 சோடி சப்பாத்துக்கள் திருட்டு

கோட்டை, திங்கள்

கடந்த செவ்வாய்க்கிழமையன்று மட்டக்குளியாவில் உள்ள இலங்கை தோல் பொருட்கள் உற்பத்திக் கூட்டுஸ்தாபனத்திலிருந்து ரூபா 3742/- பெறுமதியான 126 சோடி சப்பாத்துகள் திருடப்பட்டுள்ளன,

கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த இரு பாதுகாப்பு அதிகாரிகள் இத்திருட்டைக் கண்டுபிடித்து பொலிசாருக்கு அறிவித்தனர். பொலிசார் இத்திருட்டு சம்பந்தமாக புலன்விசாரணை செய்கின்றனர்.

...வருவதில்லையென்பது குறிப்பிடத் தக்கது.

— —

இந்த ஆண்டுக்குள்

## மஸ்கெலியா மின்சாரம்

யாழ்ப்பாணம், செவ்.

மஸ்கெலியா மின் விநியோகத் திட்டம் மேற்கொண்டுள்ள வடபிரதேச மின்வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

இவ்வாண்டு முடிவுக்குள் வடபகுதிக்கு மஸ்கெலியா மின்சாரம் கிடைத்துவிடுமெனச் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கு.வி.ம)

......

## களவு

சுழிபுரம், திங்கள்

சித்தன்கேணிப் பகுதியில் கள்வர் நடமாட்டம் அதிகத்துள்ளது. கடந்த பல நாட்களாக இப்பகுதியில் பல களவுகள் நடந்துள்ளதாகப் புகார்செய்யப்பட்டுள்ளன.

# கடத்தப்பட்ட மந்திரியும் கொலை செய்யப்படுவாராம்

## கனடா பயங்கரவாதிகள் எச்சரிக்கை

ஒட்டாவ, அக்.12

தமது நிபந்தனைக்கு இணங்காவிட்டால், தாம் கடத்திய குவபெக் தொழிலமைச்சரைக் கொலை செய்யப் போவதாக கனடா பயங்கரவாதிகள் கனடா அரசாங்கத்தை எச்சரிக்கை செய்துள்ளனர்.

பயங்கர வாதிகளின் நிபந்தனைக்கு இணங்குமாறு கடத்தப்பட்ட தொழில் அமைச்சர் அரசாங்கத்தை வேண்டியுள்ளார்.

பிரிட்டிஷ் ராஜதந்திரி ஜேம்ஸ்குளாஸ் முதலில் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டார். இவரை விடுதலை செய்வதற்கு பயங்கரவாதிகள் விதித்த நிபந்தனையை அரசு நிராகரித்த முப்பது நிமிட நேரத்தில் குவபெக் தொழிலமைச்சர் கடத்தப்பட்டது தெரிந்ததே.

பிரிட்டிஷ் ராஜதந்திரி விடுவிக்கப் படுவதற்கு தமது சகாக்கள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும், 5 லட்சம் டாலர் பணம் தமக்குத்தரப் படவேண்டுமென்றும் பயங்கர வாதிகள் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தனர். இந்த நிபந்தனைக்கு இணங்க அரசு மறுத்ததால், தொழிலமைச்சரை பயங்கரவாதிகள் கடத்தியதுடன், மீண்டும் இப்போது தொழிலமைச்சரைக் கொலை செய்யப் போவதாக எச்சரிக்கை செய்துள்ளனர்.

கடத்தப்பட்ட தொழிலமைச்சர் தமது கையெழுத்துப்பட கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

நிபந்தனைக்கு இணங்கிவிடுமாறும், இல்லாவிட்டால் தமக்கும், பிரிட்டிஷ் ராஜதந்திரிக்கும் ஆபத்து ஏற்பட்டு விடுமென்றும் அக்கடிதத்தில் தொழிலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடத்தப்பட்ட பிரிட்டிஷ் ராஜதந்திரியும், தொழிலமைச்சரும் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரியவில்லை.

...செய்த பெருமை சைவத்துக்கே உரியது. இதை பொன்னுர்மேனியனேஎன்று தொடக்கி அன்னே உன்னையல்லால் என்று விளிக்கும் சுந்தரர் தேவாரத்தால் அறியலாம். சிந்து நதிப்படுக்கையில் கண்டெடுக்கப்பட்ட சக்தி வடிவங்கள் பல பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் பாரத நாட்டில் சக்தி வழியாடு இருந்து வந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

உலகில்எவர்க்கும்அடிமை செய்யாத அறநெறி கொண்ட வீரத்தைத் துர்க்கையிடம் வேண்டுகின்ருேம் மனம் நிறைந்த, இல்லையென்று ஒருவரிடமும்கெஞ்சாத, வந்தார்க்கு இல்லையென்னுத போதும் என்ற செல்வத்தை இலக்குமியிடம் யாசிக்கிருேம். அறியாமையை நீக்கி, அருள் ஞானச்சுடர் கொளுத்தி, மனமொழி மெய்த் தூய்மை வேண்டிகலைமகளிடம்தபசு இருக்கிருேம்.

இவையெல்லாம் அருள் பெற்ற நாளாக விஜயதசமி

...கேட்டுத் தாய்ப்பசு ஓடிவருவது போல அடியார்க்கு அவாவும் அன்னாவின் அலறல் கேட்டு அம்மை அருள் சுரக்க ஓடிவருவாள்.

வல்வை சிதம்பராக் கல்லூரி விஜய தசமி நாள் விழாவில் 'அன்னையின் அருள்' என்னும் பொருளில் உரை வழங்கிய சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

... ...

## மேல்கோர்ட்டுக்கு பாரம்

ஊர்காவற்றுறை. திங்

கவலையீனமாக பஸ் வண்டியைச் செலுத்தி சரவணைக் கிராமவாசிகளான சத்தியா வயித்தியான் கார்த்திகேசு வைத்தியலிங்கம் ஆகியோருக்கு மரணம் விளைவித்ததாக குற்றம்சாட்டி இ.போ.ச. பஸ் சாரதி எஸ். மகாதேவா மீது தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டது, விசாரணையின்பின் நீதிபதி வழக்கை மேல் கோர்ட்டிற்கு பாரப்படுத்தினுர்.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 13—10—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரை கானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 திரைகானம் 1-00 திரைகானம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம்.

இரவு 6-15 இடைவேளை இசை, 6-15 இசைப்பயிற்சி. 6,30 விவசாய பிரச்னைகள். 6-45 வீட்டு வைத்தியம், 7-00 நாட்டுப் பாடல்கள். 7-15 வயலின், 7-45 திரை கானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-30 நாடகம் 10-00 நேயர் கேட்டவை. 10-30 செய்தித் தொகுப்பு. 10-35 ஒலிபரப்பு முடிவு.

"தாய்க்கு அது தெரியும்!"

குழந்தைகளுக்கு, 18 மாத வயதாகிவிட்டால்,
பெரிய எண்ணம் பிறந்துவிடுகிறது. குளிப்பாட்டியவுடனே,
மொறிசன் பேபி கொலோன் தாராளமாகத் தடவி
புழுக்கத்தையும் படபடப்பையும் நீக்கிவிடுவதால்
குழந்தை நளினிக்குத் தாய்மேல் கொள்ள ஆசை.
அம்மா கெட்டிக்காரி! குழந்தைகளுக்கான மொறிசன்
உற்பத்திப் பொருள்கள் தூய்மையானவை,
மெத்தென்றிருப்பவை, பணிவிணக்கம் மிகுந்தவை,
நியாயமான விலைக்குக் கிடைப்பவை என்பதெல்லாம்
தாய்க்குத் தெரியும். நளினி, எவ்வளவு புத்துணர்ச்சியும்
நறுமணமும் பெற்று பொலிவுடன் விளங்குகின்ருள்.




மேம்பாடு மிக்க தாயாக விளங்குவதற்கு
உங்கள் குழந்தைகளுக்கு
மொறிசன்
பேபி கொலோன்
உபயோகியுங்கள்.



மணிவாக்கு

உண்மைபேசல் அழகாய் எழுதுவதை ஒக்கும். பழகப்பழகவே அது கைகூடும். அது ஆசையை விடப் பழக்கத்தையே பொறுத்ததாகும். — ரஸ்கின்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 27-ந் திகதி (13-10-70)

## நியாயமான கோரிக்கை

பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் தான் இப்பொழுது சிறந்த மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனரென்றும் மாணவர்கள் நான்கு பல்கலைக்கழகங் களுக்கும் நியாயமான முறையில் பங்கிட்டு அனுமதிக்கப்படவேண்டுமென்றும் நான்கு பல்கலைக் கழகங்களையும் சேர்ந்த மாணவர் தூதுக்குழுவொன்று கல்விஅமைச்சரைப் பேட்டிகண்டு வலியுறுத்தியிருக்கிறது. பல்கலைக்கழகங்களில் மேலும் விடுதிவசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் மாணவர்களுக்கு இப்பொழுது வழங்கப்படும் கடன் வசதி 600 ரூபாயிலிருந்து 1000 ரூபாய க அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் முடிந்த வருடத்தில் சித்திபெறத் தவறிய பல்கலைக்கழக மாணவர்களுக்கு மூன்று மாதங்களுக்குள் விசேஷ பரீட்சை நடத்தப்படவேண்டுமென்றும் புதிய உயர்கல்விச் சட்டத்தைத் துரிதமாகக் கொண்டுவரவேண்டுமென்றும் மாணவர் தூதுக்குழு கல்விஅமைச்சரைக் கேட்டிருக்கிறது. நியாயமான இந்தக் கோரிக்கைகளுக்கு கல்விஅமைச்சர் நிச்சயம்செவிமடுத்து ஆவன செய்வாரென்றே எதிர்பார்க்கலாம்.

சிறந்த மாணவர்களை பேராதனை பல்கலைக்கழகத்துக்கும் கொழும்பு பல்கலைக் கழகத்துக்கும் தெரிவுசெய்வதன் மூலம் இதர இரு பல்கலைக்கழகங்களின் தரத்தைக் குறைக்கவும் தரம் குறைவென்ற அபிப்பிராயம் ஏற்படவும் வழி வகுப்பதாக அமையும்; தெற்கிலும் கிழக்கிலும், வடக்கிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகங்களின் தரம்பற்றி மக்கள் சந்தேகம்கொள்ளவும் இது ஏதுவாகும். பேராதனையிலும் கொழும்பிலும் இடநெருக்கடி ஏற்பட்டுவருவதாலும் மாணவர்

கலைக்கழகங்களை அமைத்தாலும் பிரச்னை தீர்க்கப்பட முடியாது போய்விடும்

பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் விடுதி வசதிகள் மோசமாக இருப்பதை இதற்கு முன்னர் பலரும் பல தடவைகளிலும் எடுத்துச்கூறியிருக்கின்றனர். பல்கலைக்கழகங்கள் நல்ல சூழலில் அமைக்கப்படுவதே, மாணவர் நிம்மதியாகக் கல்வி கற்கவேண்டுமென்ற நோக்கத்துடன் தான், பல்கலைக்கழகங்களை அமைத்து விடுதி வசதியில்லாமலும் பண வசதியில்லாமலும் மாணவர்கஷ்டமுறுவதாயின் அவர்கள் எப்படி கல்வி கற்கமுடியும்; இலவசக் கல்விக்காகக் கோடிக்கணக்கில் பணத்தை செலவிட்டுத்தான் என்ன பயன்?

விடுதி வசதிக் குறைவு, பண நெருக்கடி ஆகிய தொல்லைகளுக்கிடையில், மாணவர்கள் ஒரு தடவை பரீட்சையில் சித்திபெறத் தவறிவிட்டால் அடுத்த வருடம் முழுவதும் அவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டுமா? சித்திபெறத் தவறிய மாணவர்கள்மூன்று மாதங்களுக்குள் மீண்டும் பரீட்சை எடுப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்பதில் என்ன தவறு?

நாட்டுக்கேற்ற கல்வித் திட்டம் இன்னும் உருவாக்கப்படவில்லையென்பதை ஆசிரியர் முதல் அரசியல் வாதிகள் வரை ஒப்புக் கொள்ளுகின்றனர். புதிய கல்வித்திட்டம் உருவாக்கப் படுமென்றும் உயர்கல்வியில் நாட்டுக்கேற்றமுறையில் மாற்றம்செய்யப்படுமென்றும் கல்விஅமைச்சராகப் பதவியேற்றதும் ஒவ்வொருவரும் கடந்த பல வருடங்களாகச் சொல்லி வருகின்றனரேயொழிய காரியத்தில் எதையுங் காணோம். கல்வித்திட்டத்தில் இனியும் நாட்டுக்குத் தேவையான வற்றை நிறைவேற்றக்கூடிய

அகில இலங்கை ஆசிரிய சங்க - தேசிய ஆசிரிய சங்கப் பொன்விழா கொழும்பில் இன்று கொண்டாடப்படுகிறது

# தேசீயரீதியில் அமைக்கப்பட்ட முதல் ஆசிரிய சங்கம்

# கல்வித்துறைக்கும் ஆசிரியகுலத்துக்கும் ஆற்றிய 50 ஆண்டுப்பணி

— சு. மகேசன் —

(உபதலைவர், தேசிய ஆசிரியர் சங்கம்)

அரசாங்கத்தின் கல்விப் பகுதி 1869-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட போதிலும் ஐம்பது ஆண்டுகள் கழிந்த பின்னரே கல்வி சம்பந்தமான ஓர் பிரதான சட்டம் நிறைவேறியது சட்டசபையினால் 1920-ல் அங்கிகரிக்கப்பட்ட இச்சட்டத்தின் பிரகாரம் இலங்கையின் ஆரம்பக் கல்வியின் முழுப் பொறுப்பையும் அரசாங்கம் தானே ஏற்றுக் கொண்டது. அவ்வாண்டு கல்விச் சேவையில் அரசாங்கம் ரூபா 33,69,915 மாத்திரமே செலவு செய்தது. இச் சட்டம் வித்தியாதிபதியின் கடமைகளை வரையறுப்பதுடன் அவருக்கு ஆலோசனை கூறுவதற்கு ஓர் கல்விச் சேவையை ஏற்படுத்துவதற்கும் இடமளித்தது.

1920-ம் ஆண்டில் அகில இலங்கை ஆசிரியர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இதுவே முதன்முதல் இந் நாட்டில் தேசிய ரீதியில் தோன்றிய ஆசிரிய சங்கமாம். இதனை அமைப்பதற்கு முன்னர் சில சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. முதலாம் உலக மகாயுத்தத்திற்குப் பின்னர் அத்தியாவசியமான சில பொருட்களின் குறைவினால் ஏற்பட்ட கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு நிவாரணம் வழங்கும்படி அரசாங்கத்தை தென் மாகாணத்திலுள்ள ஆசிரியர் வேண்டிக் கொண்டனர். அப்பொழுது வித்தியாதிபதியாகக் கடமையாற்றிய இ. பி டென்காம் ஆசிரியர்களுக்கு சமமாகப் பங்கீடு செய்து கொடுக்கும்படி எல்லா உதவி நன்கொடை பெற்ற பாடசாலைகளின் முகாமையாளருக்கும் ஓர் விசேட நிவாரண நன்கொடையை வழங்கும்படி கட்டளையிட்டார்.

வேற்றியது. இச்சம்பளத் திட்டம் நியாயமான முதற் படியாகக் கருதப்பட்டது. 1930-ல்ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இச்சம்பளத்திட்டத்தை புனராலோசனை செய்வதற்குப் பெருந் தடையாக இருந்தது. அக்டோபர் மாதம் 1925-ம் ஆண்டு தொடக்கம் இந்நாட்டில் வ்தவி நன்கொடை பெற்ற பாடசாலைகளில் கடமையாற்றிய எல்ல ஆசிரியர்களும் ஓர் குறைந்தபட்ச சம்பளத்தைப் பெறக்கூடியதாயிருந்தது.

ஆசிரியர்களின் சம்பளங்களை முகாமையாளரும் அரசாங்கமும் சேர்ந்து வழங்க வேண்டுமென்று விதிக்கப்பட்டது. மாணவருடைய வரவுடன் பரீட்சைகளில் அவ்வப்பாடசாலை மாணவர் அடைந்த பெறுபேறுகளின் அடிப்படையில் உதவி நன் கொடை வழங்கும் முறைக்குப் பதிலாக ஆசிரியர்களின் சம்பளத்திற்கு அரசாங்கம் உதவி நன்கொடை செய்யும் முறை ஏற்படுத்தப்பட்டது. 1928-ம் ஆண்டு மார்ச் மாதம் ஆசிரிய ஒய்வுவேதன நிதி ஆரம்பிக்கப்பட்டது ஆசிரியரின் விதவை அனாதை ஒய்வு வேதன நிதி 1-10-51 தொடக்கம் ஆரம்பமானதென்பதையும் ஒய்வுவேதன நிதிக்குக்கட்டணம் செலுத்தும்விடயத்தில் மற்றும் அரசாங்க ஊழியரைப்போல் 1-5-70 தொடக்கமே ஆசிரியருக்கு சமத்துவம் வழங்கப்பட்டதென்பதையும் அறியும்பொழுது எங்கள் சங்கம் அடைந்த வெற்றிகளின் முக்கியத்துவத்தை உணராமல் இருக்கமுடியாது அகில இலங்கை ஆசிரியர் சங்கத்திற்கும் கல்விச் சேவைக்கும், அரும்பணிகளைப்புரிந்த பெரி

ஆசிரியர் சங்கம் 1930-ல் வடமாகாண ஆசிரியர் சங்கமாக புனரமைக்கப்பட்டது. ஓர் புதிய யாப்பின் அடிப்படையில் ஆறு கிளைச் சங்கங்களை உள்ளடக்கிய இச் சங்கம் அ. இ. ஆ. சங்கத்தின் ஓர் பிரதான அங்கமாகத்திகழ்ந்தது. 1918-ல் அமைக்கப்பட்ட தென் மாகாண ஆசிரியர் சங்கமும், 1920ல் ஸ்தாபிக்கப்பட்ட கொழும்பு ஆசிரியர் சங்கமும், கண்டி. மட்டக்களப்பு வேறுபகுதி ஆசிரியர் சங்கங்களும் அ இ ஆ சங்கத்துடன் இணைந்தன. ஜனவரி 1933ல் புதிய யாப்பு அங்கீகரிக்கப்பட்டு அ இ ஆ சங்கம் புத்துயிர்பெற்று வீறுடன் கருமமாற்றத் தொடங்கியது. ஆசிரியர்களுக்கு விதவை, அனாதை, ஒய்வு, வேதன நிதி ஆரம்பிக்கப்படவேண்டுமென்றும் பாதுகாப்பளிப்பதற்கு தீர்ப்பளிக்கும் சபை ஒன்று அமைக்கப்படவேண்டுமென்றும், ஒரு சிறந்த பாடசாலை சுகாதார சேவை அரசாங்கத்தினால் நடாத்தப்பட வேண்டுமென்றும் சங்கம் வாதாடியது. கல்விப் பகுதிக்கும் அ இ ஆ சங்கத்திற்குமிடையில் இக்காலத்தில் நல்லெண்ணம் நிலவியது.

"எப்பொழுதாவது ஒரு புதிய பாடத்திட்டத்தை உருவாக்க அல்லது நடைமுறையில் பாடத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்த உத்தேசிக்கும் பொழுது கல்விப்பகுதி அ. இ. ஆ. சங்கத்தைக் கலந்தாலோசிக்கும்" என 41-ல் வித்தியாதிபதிசங்கத்திற்கு எழுதியிருந்தார்.

### கல்விப்பணி

பொமக்களை கல்வி சேவையில் கவனமெடுக்கச்

காலத்தில் தாய் மொழி மூலம் கல்வி புகட்டப்பட வேண்டுமென்று இச்சங்கம் ஓர் பலமான இயக்கத்தை உருவாக்கியது.

கல்விச் சபை, பரீட்சைச் சபை பல்கலைக்கழக மன்றம் முதலிய சபைகளில் சங்கத்தின் பிரதிநிதிகள் அங்கம் வகித்தனர், உயர்தராதர பத்திரப், (எச் எஸ். சி,) பரீட்சை ஆரம்பிக்கப்பட்டதும் சி. த ப. பரீட்சையில் 1944-ல் ஏற்பட்ட திருத்தங்களும் இச்சங்கத்தின் முயற்சியினால் தான் என்றால் மிகையாகாது.

உலகில் பல பாகங்களில் நிகழ்ந்த சர்வதேச கல்வி மாநாடுகளில் இச்சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். 1950-ம் ஆண்டில் ஆசிரியச்சேவையில் சர்வதேச தாபனத்தில் (டபிள்யு. சி. ஓ. ரி பி) அங்கமாக அகில இலங்கை ஆசிரியர் சங்கம்இணைந்து கொண்டது 54-ல் இது தொழிற்சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. ஆசிரியர் சம்மேளனமும் தேசிய ஆசிரியர் சங்கமும்

இலங்கையிலுள்ள எல்லா ஆசிரியர் சங்கங்களும் ஒன்றாக இணைந்து கருமமாற்ற வேண்டுமென்று எங்கள் சங்கம் தொடர்ச்சியாக முயற்சி செய்து வந்தது. லங்கா ஜாதிக குரு சங்கமயா அகில இலங்கை தமிழ் ஆசிரியர்சங்கம்அகில இலங்கை அரசினர் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர் சங்கம் போன்ற தாபனங்களுடன் எங்கள் சங்கமும் ஒன்று சேர்ந்துஒருகூட்டுச்சபையை அமைத்தது முன்னேற்றத்திற்குரிய சரியான அறிகுறியாக இருந்தது.

இம்முயற்சியைத் தொடர்ந்து 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ந் திகதி அகில இலங்கை ஆசிரியர் சங்கங்களின்சம்மேளனம் கொழும்பில் உருவாக்கப்பட்டது இக்காலம் தொடக்கம் எட்டுப் பிரதான ஆசிரியர் சங்கங்கள் அங்கம் வகிக்கும்

## இரு கார்களுக்கு மேல் இனிமேல் வாங்க முடியாது

கொழும்பு. திங்கள் உள்நாட்டில் தயாரிக்கப் படுகின்ற இரண்டு கார்களைத் தவிர அதற்குமேல் கார்கள் வாங்குவதற்கு ஸ்தாபனங்களோ தனியார்களோ இனிமேல் அனுமதிக் கப்படமாட்டார்கள்.

தனிப்பட்டவர்களும் கம்பனிகளும் இப்பொழுது வைத்திருக்கும் கார்கள் விடயத்தில் இச்சட்டம்பாதகம் செய்யாது. மேலும் மக்கள் கார் வாங்குவதற்கு சாதாரண சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதே இச்சட்டத்தின் நோக்கம் எனத் தெரியவருகிறது.

இங்கு கிடைக்கக்கூடிய கார்களை தவறான வழியில் பெறுவதற்கு தனியார்களும் சில கம்பனிகளும் முயலுவதை இச்சட்டம் தடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (சி பி ஏ)

## கூட்டுறவு அடிப்படையில் கலைஞர்க்கு உதவத்திட்டம்

### உதவி கலாச்சார மந்திரி

யாழ்ப்பாணம், செவ் கூட்டுறவு அடிப்படையில் கலைஞர்களுக்கு உதவத்திட்டம் தயாரிக்கப்படவிருக்கிறது. இத்தகவலை உதவிக் காலாச்சார அமைச்சர் திரு. சோமவீரசந்திரசிறி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆ கல்யாணசுந்தரேசனிடம் தெரிவித்தார்.

ஈழத்துக் கலைஞர்களுக்கு உதவக் கூடியவகையில் கூட்டுறவு அடிப்படையில் மக்கள் அரசாங்கம் திட்டமொன்றைத் தயாரிப்பதுடன் பழம்பெரும் கலைஞர்களுக்குப் பென்ஷன் வழங்கவும் திட்டம் விரைவில் கொண்டுவரப்படவிருப்பதாகவும் உதவி அமைச்சர் அவரிடம் தெரிவித்தார்.

கிராமியக் கலைகளுக்குப் புத்துயிர் அளிக்கவும் திட்டம் தீட்டப்பட்டுவருவதாகவும் அவர் சொன்னார்.

விளையாட்டுத்துறைகளுக்கு பொறுப்பாக மாவட்ட ரீதியில் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டது போல கலைத்துறையை வளர்க்கவும் கலைத்துறை சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கவனிக்கவும் பொறுப்பாக மாவட்டங்களுக்கு ஒவ்வொரு அனுபவமிக்க கலைஞர்கள் நியமிக்கப்படுவார்களென உதவி அமைச்சர் திரு. சோமவீரசந்திரசிறி ஆசிரியர் சுந்தரரேசனிடம் தெரிவித்தார்.

(கு வீ ம)

## 'சுதந்திரக்கட்சி தமிழ் மக்களின் விரோதியல்ல'

புலோலி, திங்கள் "எமது அரசாங்கம் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி, ஐக்கியமாக வாழவே விரும்புகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழ் மக்களுக்கு விரோதமானது என்று சிலர் பிரசாரம் செய்து வருகிறார்கள். அதில் எதுவித உண்மையுமில்லை. எமது கட்சி தமிழ்மக்களுக்கு விரோதமானதல்ல, தமிழரசுக் கட்சிக்குத்தான் விரோதமானது. தமிழ் பேசும் மக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நேரடியாக ஆதரிப்பதன் மூலம் தமது உரிமைகளைப்பெற்று இந்நாட்டில் வாழும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக வாழ முடியும்."

புலோலி ஸ்ரீலங்கா சுதந்

திரு. துரைராசா தொடர்ந்து பேசியதாவது:

தேசிய ஒற்றுமை ஏற்பட நாம் அரசாங்கத்தை ஆதரிக்கவேண்டும்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தமிழர்களுடன் நேசமாகவும், அன்பாகவும் வாழ விரும்பினார். அதனால்தான் செல்வா-பண்டா ஒப்பந்தம் உருவானது.

உடுப்பிட்டி, சாவகச்சேரி, பருத்தித்துறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளை உதவி தலைவரான திரு. வே. நாகநாதன் பேசுகையில், தனிப்பட்ட சலுகைகளுக்காக இந்த சுதந்திரக் கட்சிக் கிளையை நாம் ஆரம்பிக்கவில்லை என்றும் தேசிய ஒற்றுமைக்காகவும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகங்களின் தரம்பற்றி மக்கள் சந்தேகம்கொள்ளவும் இது ஏதுவாகும். பேராதனையிலும் கொழும்பிலும் இடநெருக்கடி ஏற்பட்டுவருவதாலும் மாணவர்கள் பலவித துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருப்பதாலும் தான் புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை எழுந்ததும் இரு புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கவேண்டி ஏற்பட்டதுமாகும். நான்கு பல்கலைக் கழகங்களிலிருந்தும் பெருகிவரும் மாணவர் சமுதாயத்தின் உயர்கல்வித் தேவையை நிறைவேற்ற முடியவில்லையென்ற காரணத்தினால்தான் புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வந்ததும் கூட்டணி அரசாங்கம் தெற்கிலும் கிழக்கிலும் வடக்கிலும் பல்கலைக்கழகங்கள் அமைப்பதென்று தீர்மானித்து உறுதியளித்ததுமாகும். இப்போதுள்ள பல்கலைக்கழகங்களுக்கிடையே மாணவர்களைத் தெரிவுசெய்வதில் பாகுபாடு காட்டப்பட்டால் புதிய பல்

ராகப் பதவியேற்றதும் ஒவ்வொருவரும் கடந்த பல வருடங்களாகச் சொல்லி வருகின்றனரேயொழிய காரியத்தில் எதையும் காணோம். கல்வித்திட்டத்தில் இனியும் நாட்டுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றக்கூடிய வகையில் மாற்றம்செய்வதற்குத் தாமதிப்பது நல்லதல்ல

இன்றைய மாணவர்தான் நாட்டின் நாளைய தலைவர்கள் இப்பொழுதே அவர்களை நாட்டின் நல்ல தலைவர்களாக்க முயற்சி செய்யவேண்டும். அவர்களின் நலனைக் கவனிக்கத் தவறியதால் தான் மாணவர் மத்தியில் விரக்தி மனப்பான்மை ஏற்பட்டு கிளர்ச்சிகளும் புதிய புதிய இயக்கங்களும் தோன்றுகின்றன.

நான்கு பல்கலைக் கழகங்களின் மாணவர்களையும் சேர்ந்த தூதுக் குழு தெரிவித்துள்ள கோரிக்கைகள் நியாயமற்றவையென்று சொல்ல முடியாது. கல்வியமைச்சரும் அரசாங்கமும் இதைக்கவனத்தில் கொள்ளவேண்டியது அவர்கள் கடமையும் பொறுப்புமாகும்.

## உதவி கல்வி மந்திரியின் யாழ்ப்பாண நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்.

உதவிக் கல்விமந்திரி திரு. பி. வை. துடாவை இம்மாதம் 20-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார். அன்று மாலை 6 மணிக்கு பலாலி விமானநிலையம் வந்து சேருவார். பலாலியில் வரவேற்பு பொதுக் கூட்டமும் நடைபெறும். இரவு 9 மணிக்கு கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் உதவி மந்திரிக்கு விருந்துபசாரம் அளிக்கப்படும். இரவு காங்கேசன்துறை விருந்தினர் விடுதியில் தங்குவார்.

21-ம் திகதிய அமைச்சரின் நிகழ்சிகள்:

காலை 8-30 மணி இளவாலை, 9-00 சுன்னாகம் சிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்துக்கு அடிக்கல் நாட்டுவார், 9-45 யாழ்ப்பாணம் நாகவிகாரை, 10-00 யாழ். கல்விகந்தோர், 10-30 வடமாகாண ஆசிரிய சங்க பொன்விழா (யாழ். மத்திய கல்லூரி), 12-00 வடமாகாண ஆசிரிய சங்க தொழிற்சங்கத்தின் மதிய போசனம் மாலை 3-00 ஆசிரியர்தொழிற்சங்கப் பொதுக் கூட்டம் (வண்ணை வைத்தீஸ்வரா) 5-00 இராமநாதன் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர். 8-00 கந்தரோடையில் வரவேற்பு, 9-00 ஸ்கந்தா ஏச். எஸ். ஸி. யூனியன் விருந்து. இரவு ஊர்காவற்றுறையில் தங்குவார்.

22-ம் திகதி காலை 7 மணி திரு. துளசிராமணி இல்லத்தில் காலை உணவு, 8-00 நயினாதீவு, 11-30 யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தில் வரவேற்பு, 1-00 மதிய போசனம் அளிப்பவர் வடமாநில கல்வி அதிபதி மாலை 3-00 குமாரசாமி மண்டபத்தில் ஏச்.எஸ்.சி யூனியன் முன் சொற்பொழிவு 4-00 சிறு ஊழியர் தேநீர்விருந்து. 5-30 தெல்லிப்பழை யூனியன்கல்லூரியில் கம்யூனிஸ்ட் வாலிபர்சங்ககூட்டம், 6-30 மல்லாகத்தில் பொதுக்கூட்டம், 7-00 இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கம் தேநீர்விருந்து. 9-30 நியமன எம். பி. திரு. எம். ஸி. சுப்பிரமணியம் அளிக்கும் விருந்துவைபவம்.

23-ம் திகதிய நிகழ்ச்சி வருமாறு:- காலை 8-00 மணி புலவர்கள் -- பண்டிதர்கள் சந்திப்பு, 9-00 மணி யாழ். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் திரு. அல்பிரட் துரையப்பா அளிக்கும் காலை உணவு. 9-30 மணி யாழ். இந்துமகளிர்கல்லூரி, 10-30 முஸ்லிம் மகாவித்தியாலயம் 11-30, கொக்குவில்தொழில் நுட்பக்கல்லூரி. பகல் 1-00 மணி தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் அளிக்கும் மதியபோசனம், மாலை 3-00 கம்பர்மலை கந்தையா வித்தியாசாலை, 3-30 வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி புதிய கட்டிடத் திறப்புவிழா, 5-30 வரவேற்பு, 6-00 கரவெட்டியில் பொது வரவேற்பு.

24-ம் திகதி காலை கொழும்பு செல்கிறார்.

ளுக்கு சமமாகப் பங்கிடு செய்து கொடுக்கும்படி எல்லா உதவி நன்கொடை பெற்ற பாடசாலைகளின் முகாமையாளருக்கும் ஓர் விசேட நிவாரண நன்கொடையை வழங்கும்படி கட்டளையிட்டார்.

மாத்தறை, கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலுள்ள ஆசிரியர்கள் ஓர் திட்டவட்டமான சம்பளத் திட்டத்தையும், ஒய்வு வேதனத்தையும் கோருவதற்கு உற்சாகமேற்பட்டது. கொழும்பு, கண்டி, காலி ஆகிய மூன்று இடங்களிலும் கடமையாற்றிய ஆசிரியர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஓர்சபை சம்பளத் திட்டத்தை வகுப்பதற்கு நியமிக்கப்பட்டது. அப்பொழுது உதவி வித்தியாதிபதியாகக் கடமையாற்றிய எல்.சி.டி. ரொபின்சனின் தலைமையில் இச்சபை இருவாரங்களுக்கு ஒருமுறை கூடியது.

சம்பள விடயமாக நியமிக்கப்பட்ட சபை தனது கருமங்களை ஆற்றிக் கொண்டிருக்கும் வேளையில் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களிலிருந்துவந்த ஆசிரியப் பிரதிநிதிகள் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தை அமைக்கும் நோக்குடன் 1920-ம் ஆண்டு ஜூலை 10-ம் திகதி ஆனந்தாக் கல்லூரியில் குழுமினர். கல்விச் சேவையின் முன்னேற்றத்திற்கு உழைப்பதும் ஆசிரியரின் நல உரிமைகளைப் பாதுகாப்பதுமே இம் மத்திய தாபனத்தின் அடிப்படை நோக்கங்களாக அமைந்தன. அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தை அமைக்க வேண்டுமென்ற பிரேரணையை திரு. ரி. பி. ஜெயா முன்மொழிய திரு. காளிதாஸ்நாக் வழி மொழிந்தார். திரு. சி. பி. டயஸ் இச் சங்கத்தின் முதல் தலைவராகவும் திரு. ஜி. வீரமந்திரி பொதுச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அகில இலங்கை ஆசிரியர் சங்கம் தனது ஆரம்ப காலத்தில் இரு பெரும் வெற்றிகளை ஈட்டியது. 1925-ம் ஆண்டில் ஆசிரியர் சம்பளத் திட்டத்தை வழங்கியதுடன் 1928-ல் ஒய்வு வேதனச் சட்டத்தையும் அரசாங்கம் நிறை

கப்பட்டதென்பதையும் அறியும்பொழுது எங்கள் சங்கம் அடைந்த வெற்றிகளின் முக்கியத்துவத்தை உணராமல் இருக்கமுடியாது அகில இலங்கை ஆசிரியர் சங்கத்திற்கும் கல்விச் சேவைக்கும், அரும்பணிகளைப்புரிந்த பெரியோரின் நினைவு எங்கள் உள்ளங்களில் நன்கு பதிந்திருக்க வேண்டும். திரு. ஜி பி டயஸ், திரு ஜி டி ஏ அபயரத்ன, ஏ ஜி பிறேசர், ஏ எம் கே குமாரசாமி, ஓ பி குணரத்தின, ரி என் ஜினேந்திரதாஸ், ரி இ லூடோவைக், ஜி சி மெண்டிஸ், நெவின்ஸ் செல்வத்துரை, சி வி பெரேரா, ஜி. வீரமந்திரி, எம் எம் ஏ அசீஸ், ஹண்டி பேரின்பநாயகம் கே நேசையா, ஏ ஈ தம்பர் ஆகியோரின் சேவை மதிப்பிட முடியாதது.

### புனரமைப்பு

அகில இலங்கை ஆசிரியர் சங்கமும் சில கிளைச் சங்கங்களும் சில ஆண்டுகள் முறையாக இயங்கவில்லை. இலங்கையில் 1914ல் தோன்றிய மிகப் பழைய யாழ்ப்பாண

கல்விப்பகுதி அ. இ. ஆ. சங்கத்தைக் கலந்தாலோசிக்கும்" என 41-ல் வித்தியாதிபதிசங்கத்திற்கு எழுதியிருந்தார்.

### கல்விப்பணி

பொதுமக்களை கல்விச் சேவையில் கவனமெடுக்கச் செய்யும் நோக்குடன் கல்வி வாரம் வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வந்தது 1934-ல் முதன்முதல் சங்கத்தின் இலங்கை ஆசிரியர் என்ற வெளியீடு பிரசுரிக்கப்பட்டது 1937-ல் மட்டக்களப்பில் கூடிய மாநாட்டில் ஓர் கல்வி விசாரணைச் சபையை அரசாங்கம் நியமிக்கவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவாகத்தான் கலாநிதி கன்னங்கராவின் தலைமையில் கல்வியைப் பற்றி விசாரணைசெய்ய பொறுக்குச்சபை நியமிக்கப்பட்டதெனலாம் ஆங்கிலம் மாத்திரம் ஆரம்ப வகுப்புகளுக்கு மேற்பட்ட வகுப்புகளில் போதனமொழியாக தொடர்ந்திருக்கமுடியுமென்று பலர் கருதிய

இம்முயற்சியைத் தொடர்ந்து 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ந் திகதி அகில இலங்கை ஆசிரியர் சங்கங்களின்சம்மேளனம் கொழும்பில் உருவாக்கப்பட்டது இக்காலம் தொடக்கம் எட்டுப் பிரதான ஆசிரியர் சங்கங்கள் அங்கம் வகிக்கும் இச்சம்மேளனம் ஆசிரிய சமூகத்தை ஒன்று திரட்டி ஒற்றுமை உணர்ச்சியை வளர்த்து ஆசிரியர்களின் பொதுவான அடிப்படைக் குறிக்கோள்களைப் பெறுவதற்குப் பெருமுயற்சிசெய்து வருகின்றது பன்னிரு கோரிக்கைகளை தயாரித்து அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்ததும்சம்பள நிர்ணய சபைக்கு ஒரு பொதுவான சம்பளத் திட்டத்தைத் தயாரித்து அனுப்பியதும் சம்மேளனத்தின் பெரிய சாதனைகளாகும். கல்விச் சேவையிலுள்ள எல்லோரையும் ஓர் சங்கத்தில் ஒன்று திரட்ட வேண்டுமென்ற இலட்சியத்தை அடையும் நோக்குடன் எமது சங்கம் தொடர்ந்து கருமமாற்றும்.

பேசும் மக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நேரடியாக ஆதரிப்பதன் மூலம் தமது உரிமைகளைப்பெற்று இந்நாட்டில் வாழும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக வாழ முடியும்."

புலோலி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டுபேசிய வடபிரதேச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு. எம். துரைராசா இவ்வாறு கூறினார்.

சுதந்திரக் கட்சிக்கிளை உதவி தலைவரான திரு. வே. நாகநாதன் பேசுகையில், தனிப்பட்ட சலுகைகளுக்காக இந்த சுதந்திரக் கட்சிக் கிளையை நாம் ஆரம்பிக்கவில்லை என்றும் தேசிய ஒற்றுமைக்காகவும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் இதனை ஆரம்பிக்கிறோம் என்றும் கூறினார்.

பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. நா. கிருஸ்ணகுமார், உப தலைவர் திரு. வ. செல்வராசன், காரியதரிசி திரு. அ. மகேந்திரன், பொருளாளர் க. சிவநாதன் நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

......

## நவராத்திரிக் கொலு

கொழும்பிலே இம்முறை நவராத்தியில் பல வீடுகளிலும் 'கொலு' வைத்திருப்பதைப்பார்த்தேன் அழகு அழகான பொம்மைகளை (இலங்கையிலேயே செய்து) பல படிகளிலும் வைத்திருந்தார்கள் கிருஷ்ணன், ராமன், சரஸ்வதி, மகாலக்ஷ்மி போன்ற பெரிய பெரிய பொம்மைகளை தமிழகத்திலிருந்து வாங்கிவந்ததாக சில அன்பர்கள் தெரிவித்தனர்.

ஒரு வீட்டில் சிறீதியாகப் பிரம்மத்தின் பெரிய உருவம் இருந்ததைக்கண்டேன். இலங்கையிலேயே ஒரு கலைஞர் செய்ததாம் அது நல்ல நல்ல உருவங்களைக்கலை அழகுடன் செய்யக்கூடியவர்கள் இலங்கையில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கு போதிய ஆதரவும் உற்சாகமும் அளித்தால், இலங்கையிலேயே மனதைக்கவரக் கூடியபொம்மைகளையும், கலைப்பொருள்கள் பலவற்றையும் அவர்கள் செய்யக்கூடும்.

நவராத்திரி விழா ஒருவிதத்தில் கலைஞர்களை ஆதரிக்கும்விழாவாகும். நவராத்திரி கொலு வைத்துள்ள ஒவ்வொரு வீடும் ஒரு கலைக் காட்சியாகப் பொலிந்தது. ஒருவீட்டு கொலுவில் பழநி மலையும் கோவிலும் செய்து வைத்திருந்ததைப் பெருமையுடன் காட்டினர். இவ்வித கலைக்காட்சிகளால், கலைஞர்களுக்குப் பிழைப்புக்கிடைக்கிறது. வீடுகளும் அழகு பெருகின்றன. தெய்வீகமும் வளர்கின்றது.

0 0 0

பெண்மையைப் போற்றும் விழாவான நவராத்திரியிலே பல பெண்கள் விதம்விதமாக உடுத்து ஒவ்வொருவரும் ஒரு பெண் தெய்வம் போல் அழகாகக்காட்சி அளித்தனர். பம்பலப்பிட்டியில் ஒரு வீட்டில் வைத்திருந்த கொலுவுக்கு, சிங்களப்

**ஐயாறன் எழுதுகிறது**

பெண்கள் பலர் வந்து பார்த்து மகிழ்ந்தனர். வெள்ளவத்தையில் ஒரு வீட்டுக்கு, 'போரா' சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் பலர் வந்து நெற்றியில் குங்குமம் வைத்துக்கொண்டு தாம் பூலம் முதலியவற்றை வாங்கிக்கொண்டு சென்றதைக் கண்டேன். அவர்கள் தங்கள் குடும்ப நண்பர்கள் என்றும் வித்தியாசமின்றி அவர்கள் இவ்விதவிழாவில் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்வரென்றும் அவ்வீட்டுக்கார அன்பர் தெரிவித்தார். சாதி சமயவேற்றுமை மறைந்து, இவ்வித விழாக்கள் பெண் குலத்தை ஒற்றுமைப்படுத்துமாயின், அது எவ்வளவு நன்மை!

எளிய கன்னிப்பெண்களுக்கு முன்காலத்திலே நவராத்திரிகாலத்தில் சிற்றாடைகளை இலவசமாகக்கொடுத்து. அவர்களை பூசிப்பதுண்டு. இன்றும் கூட தமிழகத்திலே சில குடும்பங்களில் இந்தவழக்கம்இருக்கின்றது.

பல கோயில்களிலும் காரியாலயங்களிலும் நவராத்திரி விழா இம் முறைசிறப்பாக நடந்துள்ளன. சமூகத்துக்கு பல விதங்களிலும் இவ்விழாக்களால் நன்மைசெய்யமுடியும் இலங்கைவானொலியில் விஜயதசமியன்று காலையில் மகிஷாசுர மர்த்தனி சம்ஸ்கிருத பாடல்களை ஒலிபரப்பினர்' இந்திய வானொலியிலிருந்து எடுத்து இதை ஒலிபரப்பியது குறிப்பிடத்தக்கது பக்கவாத்தியங்கள் எதுவுமின்றி இப்பாடல்கள் பலபல ராகங்களில் பாடப்பட்டதுமிகஇனிமையாகவும் இயற்கையாகவும், அந்த நாளன்று மிகப்பொருத்தமாகவும், பக்தியை வளர்ப்பதாகவும் இருந்தது. இந்தியா - இலங்கை வானொலிகளுக்கிடையே இவ்வித ஒத்துழைப்பு அதிகரிப்பது வரவேற்கத்தக்கதாகும்.

0 0 0

வெள்ளவத்தையில் ஒரு வீட்டில் கொலு பார்ப்பதற்கு, சில பெண்கள் நன்கு உடுத்து நகை முதலியவற்றை அணிந்து தெருவில் நடந்து வந்தனர். அப்போது இரவுமணிசுமார் 7-30 இருக்கும் அதைக்கவனித்துக் கொண்டிருந்த ஒருவன் ஒருபெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை பறித்துக்கொண்டு ஓடிவிட்டான் தலைநகரில் நிலைமை எப்படி இருக்கிறதென்று காட்டவே இதைக்குறிப்பிட்டேன். நகையை இழந்தவர்கள் பொலிசில் புகார் பதிவு செய்தார்களாம் ஆனால் போன சங்கிலியை போலீசாரால் கண்டுபிடித்துக்கொடுக்க முடியுமா? இதற்குள் அது எவ்வளவு கைமாறிவிட்டதோ! முன்னேஸ்வரம் தேர்த்திருவிழாவிலும் இப்படிப்பலர் (இரவல்) சங்கிலியை இழந்ததைக் குறிப்பிட்டேன், நகையை இழந்தவர்களுக்கு எப்படி இருக்கும்.

இக்காலத்திற்கேற்ற விதவிதமான போலி நகைகள் வந்துள்ளன கோவிலிலே அம்மனுக்கும் கூட இதை அணிவிப்பதைப் பார்த்தேன் அது பார்ப்பதற்கு மிக வடிவாக உள்ளன. தொலைந்து போனாலும் நஷ்டம் மிகக் குறைவுதான்' யாரும் திருட நினைக்கவும் மாட்டார்கள், நகைகளை அணியவேண்டுமாயின் இவ்வித நவீன போலி நகைகளை அணிவது பலவிதங்களிலும் நல்லது, நகைகளால் சில சமயம் உயிருக்குக்கூட ஆபத்து ஏற்படுகின்றது. ஆகவே விலையுயர்ந்த நகைகளை அணியப்படாதென்று பெண்குலத்தார் தீர்மானித்து அவ்விதமே செய்வது அவர்களுக்கே பத்திரம், நாட்டில் 'பிக்பாக்கெட்' பட்டாளம் அதிகரித்துவருகின்றது விலை உயர்ந்த நகைகளை யார் அணிந்து வருகிறார்கள். என்பது அவர்களுக்குத் தெரியும் அதனால் பெண் குலத்தார், இனி அதிக கவனமாக இருக்கவேண்டு மென்பதை மீண்டும் வற்புறுத்தவிரும்புகிறேன்.

### விசேட முத்திரை

யாழ்ப்பாணம், செவ்

உபதபாற் கந்தோர் ஆரம்பிக்கப்பட்டு 50 வருட பூர்த்தியைக் கொண்டாடுமுகமாக விசேட முத்திரை ஒன்றை தபால் தந்திப்பகுதி வெளியிடவிருக்கிறது


**ஈழநாடு**

**வாரமலர்**

**14-10-70**

த. இந்திரலிங்கம் எழுதுகிறார்
எங்கள் கிராமம்
**அரியாலை**

சிறுகதை

வேங்கைக் குமரனின்
'அம்மன் அருள்'

கட்டுரை

எங்கும் மோகம் எதிலும் மோகம்
— சுகி சுப்பிரமணியன்.

சிந்து வெளிநாகரிகம் பற்றிய புதிருக்கு சோவியத் ஆராய்ச்சியாளரின் முடிவு.

இவற்றுடன் மற்றும் வழமையான சிறுவர் மலர், குடும்பச் சுடர், கலை அரங்கம் ஆகிய சிறப்பு அம்சங்களைத் தாங்கி வருகிறது.



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org